வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 19.08.2025 செவ்வாய்க்கிழமை | இதழ் : 231 | பக்கங்கள் : 12

# தமிழரசு ஏற்பாடு செய்த ஹர்த்தால் படுதோல்வி!

## வட, கிழக்கில் தமிழ் மக்கள் நேற்று வழமையான செயல்பாட்டில்

- பெரும்பாலான கடைகள் திறக்கப்பட்டன
- போக்குவரத்து சேவைகளும் வழமைபோல்
- அரச அலுவலகங்களும் பாடசாலைகளும் இயங்கின




யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 19

**வடக்கு, கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றக் கோரி தமிழரசு கட்சியினால், பூரண கதவடைப்பு போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில், வடக்கின் ஒரு சில இடங்களில் கதவடைப்பு போராட்டத்துக்கு ஆதரவு வழங்கப்பட்டபோதிலும் பெருமளவான இடங்களில் இயல்பு நிலை சுமுகமாக காணப்பட்டது.**

முத்தையன்கட்டு குளத்தில் இருந்து இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்ட

11




வரலாற்றுப் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழாவில் 21ஆவது நாளான நேற்றிரவு தங்க ரதத்தில் முருகப்பெருமான் எழுந்தருளி அருள்பாலித்தபோது...

படம் - ஐ. சிவசாந்தன்

## வர்த்தக சங்கத்துக்குள் வவுனியாவில் குழப்பம்

வவுனியா, ஒக. 19

தமிழரசுக் கட்சியின் ஹர்த்தால் அறிவிப்பு தொடர்பில் வவுனியா வர்த்தக சங்கத்துக்குள் குழப்பம் ஏற்பட்டது.

குறித்த குழப்பம் ஊடகங்கள் முன்னிலையில் வவுனியா பழைய பஸ் நிலையம் முன்பாக நேற்று இடம்பெற்றுள்ளது.

ஹர்த்தால் நிலவரம் தொடர்பில் வவுனியா வர்த்தக சங்கத் தலைவர் கே. கிருஷ்ணமூர்த்தி ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோது, வர்த்தக சங்கத்தின் போசகரும், ரெலோ கட்சியின்

11

## ஹர்த்தால் வெற்றி

### சொல்கிறார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், ஒக. 19

யாழ்ப்பாணத்தை தவிர்த்து ஏனைய இடங்களில் ஹர்த்தால் வெற்றியளித்துள்ளது என இலங்கை தமிழரசு கட்சியின் பதில் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது குறித்து சுமந்திரன் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கு-கிழக்கில் உள்ள இராணுவத்தினரை அகற்றுமாறு கோரிக்கையை முன்வைத்து ஹர்த்தாலுக்கு தமிழரசுக் கட்சி அழைப்பு

11

## நாட்டின் பொருளாதாரத்தில் தற்போது ஸ்திரமான நிலை

### கூறுகிறது அநுர அரசாங்கம்

கொழும்பு, ஒக. 19

நாட்டின் பொருளாதாரத்தில் தற்போது ஸ்திரத்தன்மை ஏற்பட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

மொறட்டுவை - கட்டுப்பெத்த இலங்கை

11

## தாளையடி கடலில் நண்பர்களுடன் நீராடிய இளைஞர் பரிதாப மரணம்

யாழ்ப்பாணம், ஒக. 19

வடமராட்சி கிழக்கு தாளையடி பகுதியில் நண்பர்களுடன் கடலில் நீராடிய இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு தாளையடி பகுதியில் நண்பர்களுடன் நீராடிக் கொண்டிருந்த இளைஞர் கடலில் பல்டி அடித்தபோது தலையில் காயம் ஏற்பட்டு உயிரிழந்தார்.

11

## கடற்றொழிலுக்கு சென்ற நபர் நெஞ்சுவலி ஏற்பட்டு உயிரிழப்பு

### மயிலிட்டி பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக. 19

யாழில் சகலனுடன் கடலுக்குச் சென்ற நபர் ஒருவர் திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் உயிரிழந்துள்ளார்.

விநாயகர் வீதி, மயிலிட்டிப் பகுதியைச் சேர்ந்த அரியகுட்டி ஹரிஹரன் (வயது-64) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர் நேற்று முன் தினம் இரவு தனது

11

## பணம் ஈட்டிய வழிமுறைகள் தொடர்பில் முன்னாள் அமைச்சர்களிடம் விசாரணை

கொழும்பு, ஒக. 19

நிதி மோசடி சட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட விசாரணை தொடர்பாக நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவின் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணை பிரிவு மூன்று முன்னாள் அமைச்சர்களிடம் விசாரணையைத் தொடங்கியுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் அமைச்சர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, அனுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் ரோஹித அபேகுணவர்த்தன ஆகியோருக்கு எதிராக இந்த விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளதாக அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2011 ஆம் ஆண்டின் 40 ஆம்

11

## முத்தையன்கட்டு படை முகாம் சம்பவம் பிரிவினைவாதிகளின் திட்டமிட்ட செயல்

### உதய கம்மன்பில கூறுகிறார்

கொழும்பு, ஒக. 19

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் இராணுவ முகாமுக்குள் இளைஞர்கள் சட்டவிரோதமாக பிரவேசித்தமை பிரிவினைவாதத் தரப்பினரின் திட்டமிட்ட செயலாகவே தெரிவதாக பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

முல்லைத்தீவு முத்தையன்கட்டு இராணுவ முகாமுக்குள் சென்ற இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவத்தின் மூலம் சில பிரிவினைவாதத் தரப்பினர் அரசியல் இலாபம் ஈட்டுவதற்கு முயற்சிக்கின்றனர்.

இதனூடாக

11

## 36 கட்சிகளின் விண்ணப்பங்கள் நிராகரிப்பு

கொழும்பு, ஒக. 19

2025 ஆம் ஆண்டுக்கான பதிவுக்கு விண்ணப்பித்த 83 புதிய அரசியல் கட்சிகளில் 36 கட்சிகள் நிராகரிக்கப்பட்டதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பதிவுக்கு விண்ணப்பித்த குறித்த அரசியல் கட்சிகள் ஆரம்ப பரிசீலனையின் போது அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்ய தவறியிருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மீதமுள்ள 47 அரசியல் கட்சிகளின் விண்ணப்பங்கள் தற்போது பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும், இந்த அரசியல் கட்சிகளின்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைநிறுத்த போராட்டம் செய்தால் வழக்கு தாக்கல்

### தபால் ஊழியர்களுக்கு அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, ஒக. 19

தபால் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தால் அவர்களுக்கு எதிராக பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் வழக்கு பதிவு செய்யவுள்ளதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ எச்சரித்துள்ளார்.

கடமைக்கு சமுகமளிக்கும் போது கைவிரல் அடையாளம் மூலம் வருகையை உறுதிப்படுத்தும் செயல்பாட்டுக்கு எதிராக தபால் திணைக்கள ஊழியர்கள் நேற்று வேலைநிறுத்தப் போராட்டம் செய்தனர்.

இந்நிலையில் குறித்த வேலை நிறுத்தம் அநீதியானது என்று வெகுசனத்தொடர்பு மற்றும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கண்டனம் தெரிவித்துள்ளார்.

தபால் திணைக்களம் நட்டத்தில் இயங்குவதைப் பொருட்படுத்தாமல் கடந்த முறை சம்பள அதிகரிப்பின் போது தபால் திணைக்கள ஊழியர்களுக்கும் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டிய அமைச்சர் நளிந்த, அவ்வாறான பின்புலத்தில் மேற்கொள்வதன் மூலம் தபால் திணைக்களம் இன்னுமின்னும் நட்டத்தையே எதிர்கொள்ளும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான நிலையில் வேலை நிறுத்தம் மேற்கொள்ளும் தபால் திணைக்கள ஊழியர்களுக்கு எதிராக பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் வழக்குப் பதியப்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (அ)

## நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஒக. 19

இலங்கை இளங்கலைஞர் மன்றம், நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபமும் இணைந்து நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று மாலை 6.45 மணி தொடக்கம் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இசை அர்ச்சனை அக்கடமி மாணவர்களின் பாட்டு குழு இசை நிகழ்ச்சியில் இடம்பெறும். அணி செய் கலைஞர்களாக வயலின் - நந்தினி சுவாமிநாத சர்மா,மிருதங்கம் - சு. அரவிந்தசுப்ரமணிய சர்மா, தபேலா - சு. அனந்தநாராயண சர்மா பங்கேற்பர்.

இசை அரங்கு நிகழ்ச்சியில் பாட்டு - சின்னையா சூரியகுமார், வயலின்- பத்மநாதன் சியாம்கிருஷ்ணா, மிருதங்கம் - வரதராஜ சர்மா ரமண சர்மா, கெஞ்சிரா - ரமண சர்மா லய சர்மா, மோசிங் - ரமண சர்மா காமிருதசர்மா, உதயகுமார் ஹிதுசன். (ஐ)

## இந்து முகம் சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக. 19

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழா காலத்தில் ஆண்டுதோறும் வெளிவரும் இந்துமுகம் ஆன்மீக சஞ்சிகை இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு வெளியிடப்படவுள்ளது.

முகவரி அமைப்பின் ஆசிரியர் பாலமுருகனின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த சஞ்சிகை வெளியீடு நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் மதுரகவி காரை. எம். பி. அருளானந்தன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும்.

இந்த நிகழ்வில் டான் தொலைக்காட்சி குழுமத் தலைவர் எஸ். எஸ். குகநாதன், டான் தொலைக்காட்சி குழும பிரதம செயல்பாட்டு அதிகாரி இ. செல்வச்சந்திரன், முன்னாள் பேராசிரியர்கள் பொன். பாலசுந்தரம்பிள்ளை, என். சண்முகலிங்கன், மா. வேதநாதன், ப. கோபாலகிருஷ்ண ஐயர், மருத்துவர் சி. யமுனானந்தா ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (ஐ)

## நெடுந்தீவில் கிளீன் சிறீ லங்கா திட்டம்



யாழ்ப்பாணம், ஒக. 19

கிளீன் சிறீ லங்கா செயற்றிட்டத்தின் கீழ் நெடுந்தீவில் கிளீன் சிறீ லங்கா செயற்றிட்டம் தொடர்பில் பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வளிக்கும் நிகழ்வு நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் , கிளீன் சிறீ லங்கா செயற்திட்ட செயலணியினர் கலந்து கொண்டு பாடசாலை மாணவர்களுக்கான சைக்கிளுக்கு ரயர்கள், உபகரணங்களையும் வழங்கி வைத்தனர்.

# நல்லாட்சியில் நடந்த பாவங்களுக்கு ஜே.வி.பியும் பொறுப்பு கூறவேண்டும்!

### சுட்டிக்காட்டுகிறார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, ஒக. 19

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துக்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பொறுப்பு கூறவேண்டும்." - என்று பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தினார்.

'ரணில் விக்கிரமசிங்கவின் நல்லாட்சி காலத்தில் ஊழல் ஒழிப்பு பிரிவில் ஜே.வி.பியின் அங்கம் வகித்தனர். அலரி மாளிகையில் தங்கி இருந்தனர். எனவே, நல்லாட்சியில் இடம்பெற்ற பாவச் சம்பவங்களுக்கு இந்த அரசாங்கமும் பொறுப்பு கூறவேண்டும்.

நல்லாட்சி காலத்தில் இடம்பெற்ற மத்திய வங்கி பிணைமுறி மோசடி, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் ஆகியன தொடர்பிலும் ஜே.வி.பியினர் பொறுப்பு கூறவேண்டும்.

ஜே.வி.பியின் தேசியப் பட்டியல் உறுப்பினரின் இரு மகன்மார் தற்கொலை குண்டுதாரிகளாக மாறினர். புலனாய்வு அறிக்கைகை தவறவிட்ட அதிகாரிகள் இந்த ஆட்சியில் உயர் பதவியில் இருக்கின்றனர். இவற்றை அரசாங்கம் மூடி மறைத்துவருகின்றது." - என நாமல் ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டார். (அ)

## கடுவலையில் 8 துப்பாக்கிகள் மீட்பு

கொழும்பு, ஒக. 19

கடுவலை, கொரத்தொட்ட துனந்தஹேன பகுதியிலிருந்து மூன்று ரி - 56 துப்பாக்கிகள், 5 பிரவுனிங் பிஸ்டல்கள் மற்றும் ஒரு மெகசின் ஆகியன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியிலுள்ள மரமொன்றுக்கு அடியிலிருந்து இவை மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளுக்காக அவை நவகமுவ காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# 'இன்றைய தமிழன்' நூல் கொடிகாமத்தில் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக. 19

திருஞானசம்பந்தன் ஆத்மசகாயனின் "இன்றைய தமிழன்" நூல் வெளியீட்டு விழா யாழ். கொடிகாமத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

உசன் இராமநாதன் மகா வித்தியாலய உப அதிபர் வைரவப்பிள்ளை விஜயகுமாரன் தலைமையில் இடம்பெற்ற நூல் வெளியீட்டு விழாவில்,

நூல் அறிமுகவுரையை யாழ்ப்பாண பல்கலைக்கழக அரசறிவியற்துறை தலைவர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் நிகழ்த்தினார்.

நூல் வெளியீட்டுரையை பலாலி ஆசிரியர் கலாசாலை ஓய்வுநிலை அதிபர் கு.சதாசிவமூர்த்தி நிகழ்த்தினார்.

இதன்போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மறவன் புலவு சச்சிதானந்தன் நூலை வெளியிட்டு வைக்க, முதற்பிரதியை சிரேஷ்ட மொழிபெயர்ப்பாளர் பா.வே.இராசரத்தினம் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து சிறப்பு பிரதிகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண முன்னாள் விவசாய பணிப்பாளர் ரி.கே.சுப்பிரமணியம், யாழ். பரியோவான் கல்லூரி ஓய்வு நிலை ஆசிரியர் மா.சிவசுப்பிரமணியம், தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ.கைலாசநாதன், யாழ். மாவட்டச் செயலக தலைமைப் பொறியியலாளர் க.திருக்குமார், சிரேஷ்ட மொழிபெயர்ப்பாளர் பா.வே.இராசரத்தினம், கல்வியியலாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். (அ)

## செந்தில் தொண்டமான் மலேசியா பயணம்

கொழும்பு, ஒக. 19

மலேசிய பாராளுமன்ற உறுப்பினர் டத்தோ சிறீசரவணனின் அழைப்பின் பேரில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் மலேசியா பயணமானார்.


நேற்று அவர் மலேசியாவில் உள்ள திருமுருகன் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளில கலந்து கொண்டார். (அ)

# வவுனியா மாநகர சபையினர் அறவிடும் வரியை 5 வீதமாகக் குறைக்கவேண்டும்!

வவுனியா, ஒக. 19

வவுனியா மாநகர சபையினால் மக்களிடம் அறவிடப்படும் வரியை 5 வீதமாக குறைத்துக் கொள்ள வேண்டும் எனவும் அந்த நிதியை மட்டும் வைத்து மாநகர சபையை இயக்க வேண்டியதில்லை எனவும் தேசிய மக்கள் சக்தியின் வவுனியா மாநகரசபை உறுப்பினர் சி. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (அ)





நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் 21ஆம் திருவிழாவான நேற்று திங்கட்கிழமை (18) காலை கஜவல்லி, மகாவல்லி உற்சவம் நடைபெற்றது. காலை நடைபெற்ற வசந்தமண்டப பூஜையைத் தொடர்ந்து தங்க அன்ன வாகனத்தில் கஜவல்லி, மகாவல்லி எழுந்தருளி பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்ததருணம்....! படங்கள் - ஐ. சிவசாந்தன்

## அத்துரலிய தேரரை கைது செய்ய உத்தரவு

கொழும்பு, ஒக. 19

முன்னாள் எம். பி. அத்துரலிய ரதன தேரருக்கு நுகேகொடை நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

இதேநேரம், தேசிய லொத்தர் சபையின் முன்னாள் நிறைவேற்று பணிப்பாளர் துசித ஹல்லொலுவவுக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் முன்வைத்த வேண்டுகோளைத் தொடர்ந்து, குறித்த நீதிமன்றங்கள் அவர்கள் இருவருக்கும் பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
19.08.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், ஆவணி 03

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இதுதானே நீங்கள் விரும்பியது?

ஹர்த்தால் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து அது தொடர்பில் ஆதரவான கருத்துகள் வெளிவந்ததை விடவும் எதிர்மறையான கருத்துகளே அதிகமாக வெளிவந்திருந்தன. இலங்கை தமிழ் அரசு கட்சியின் அறிவிப்பாக இருந்த போதிலும், கட்சியின் பொதுச் செயலாளரின் பெயரிலேயே விடயங்கள் நோக்கப்பட்டன. தமிழ் அரசு கட்சியின் உள்சிக்கல்களே இதற்கான அடிப்படையான காரணமாகும். இவ்வாறானதொரு பின்புலத்தில் இவ்வாறானதொரு ஹர்த்தால் தேவைதானா என்னும் கேள்வி எழுந்திருக்க வேண்டும்.

ஒரு காரியத்தை முன்னெடுப்பதால் வரும் நன்மைகளை விடவும், அதனால், பாதகமான விளைவுகள்தான் அதிகம் ஏற்படும் என்றால் அவ்வாறானதொரு விடயத்தை முன்னெடுக்கக்கூடாது. முப்பது வருடங்களுக்கும் மேலான மிதவாத அரசியல் அனுபவம், முப்பது வருடங்களுக்கும் மேலான ஆயுதப் போராட்ட வரலாறு - இவற்றுக்கு பின்னரும்கூட விடயங்களை புரிந்து கொள்ள முடியவில்லை என்றால், ஈழத் தமிழ் இனத்தை கடவுளே விரும்பினாலும் காப்பாற்ற முடியாது.

தமிழ் அரசு கட்சி இப்போதும் ஒரு கட்சியாக இருப்பதற்கு மக்கள் வாக்களிப்பதே பிரதான காரணம். அதற்கப்பால் மக்களை வழிநடத்தக்கூடிய, மக்களுக்கு உத்தரவிடக் கூடிய ஆற்றலுடன் அந்தக் கட்சி இல்லை. குறிப்பாக அந்தக் கட்சி பல மாதங்களாக உள் முரண்பாடுகளுக்குள் சிக்குண்டு கிடக்கின்றது. மக்கள் வேறு தெரிவுகள் இல்லாத காரணத்தால், ஒப்பீட்டடிப்படையில் தொடர்ந்தும் தமிழ் அரசு கட்சிக்கே வாக்களித்து வருகின்றனர். மக்கள் வாக்களிக்கின்றார்கள் என்பதற்காக கட்சியின் அறிவிப்புக்கு பின்னால் எடுபட்டுச் செல்ல மாட்டார்கள். தமிழ் அரசு கட்சியின் ஹர்த்தால் அறிவிப்பு இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு.

இவ்வாறான கடையடைப்பு அணுகுமுறைகள் எப்போதோ காலாவதியாகிப் போன ஓர் உத்தி. ஓர் அநீதிக்கு எதிரான மக்கள் எதிர்ப்பை அமைதி வழியில் காண்பிக்க வேண்டுமாயின் சில விடயங்களை செய்யலாம். ஆனால், அதற்காக முன்வைக்கப்படும் காரணங்கள் வலிதானதாகவும் நியாயமானதாகவும் இருக்க வேண்டும். தமிழ் அரசு கட்சியின் அணுகுமுறை இந்த அடிப்படையில் அமைந்திருக்கவில்லை.

அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு விடயத்தை முன்னெடுத்திருந்து, அதனை மக்கள் முழுமையாக ஆதரித்திருந்தால்கூட, ஆகக் குறைந்தது தமிழ் மக்கள் ஒரு விடயத்தில் ஒன்றாக நிற்கின்றனர் என்னும் செய்தியாவது தென்னிலங்கைக்கு சென்றிருக்கும். ஆனால், தற்போது அதுவும் நிகழவில்லை. வடக்கு - கிழக்கில் தமிழ் கட்சிகள், தமிழ் மக்களை வழிநடத்தும் தகுதியை முற்றிலும் இழந்து விட்டதான செய்தியையே, இந்தக் ஹர்த்தால் நடவடிக்கை வெளிக்கொண்டு வந்திருக்கிறது.

இதற்கான முழுப் பொறுப்பும் இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைமையையே சாரும். ஏனெனில், தமிழ் அரசு கட்சியால் ஒரு விடயத்தை கட்டுக்கோப்புடன் முன்னெடுக்க முடியாத நிலையில் இவ்வாறானதொரு முயற்சியில் ஈடுபட்டடிருக்கக்கூடாது. அத்துடன், மடு மாதா திருவிழாவை முன்னிட்டு ஹர்த்தால் திகதி பிற்போடப்பட்டது. ஆனால், பல்லாயிரணக்கான இந்துக்களின் வழிபாட்டுத் தலமான நல்லூர் திருவிழா இரண்டாம் பட்சமாக்கப்பட்டிருக்கிறது. இந்துக்களின் நம்பிக்கை காலால் மிதிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறான பின்புலத்தில் நோக்கினால், தேவையற்ற ஒரு விடயத்தை செய்து, இறுதியில் அரசாங்கத்தின் வாதத்துக்கே வலுச் சேர்க்கப்பட்டிருக்கின்றது. மேலும் முத்தையன்கட்டு விடயத்தின் விசாரணை அறிக்கை வெளிவரும்போது நிலைமை இன்னும் மோசமாகும். எதிர்காலத்தில் சரியான விடயங்களை முன்வைத்தாலும்கூட, அதன் உண்மைத் தன்மையை மற்றவர்கள் சந்தேகம் கொள்வதற்கே வழிவகுக்கும். மொத்தத்தில் உள்ளதையும் கெடுத்தானாம் ஆண்டி என்னும் நிலையிலேயே ஹர்த்தால் முடிவுற்றிருக்கின்றது.

# ஐ.நா. மனித உரிமை ஆணையாருக்கு சட்ட மா அதிபர் திணைக்களம் பதில்!

கொழும்பு, ஓக. 19

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளருக்கு வழங்கவேண்டிய பதிலை, சட்ட மாஅதிபர் திணைக்களம் தற்போது தயாரித்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர் இலங்கை குறித்த தனது அண்மைய அறிக்கையில் சட்ட மாஅதிபர் அலுவலகத்தை நீதிக்கு ஒரு முக்கிய தடையாக விபரித்துள்ளார்.

அதே நேரத்தில் ஒரு சுயாதீன வழக்கு தொடுநர் அதிகாரத்தின் அவசியத்தையும் வலியுறுத்தியிருந்தார். இதனையடுத்தே குறித்த கருத்துக்கள் தொடர்பில் வெளியுறவு அமைச்சுடன் கலந்தாலோசித்து பதில் வரைவு செய்யப்பட்டு வருவதாக சட்ட மாஅதிபர் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பரில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது அமர்வில் சமர்ப்பிக்கப்படும் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்கின் அறிக்கையில் அவர் முன்வைக்கும் கருத்துகளுக்கு, இலங்கை அரசாங்கத்தின் பதிலின் ஒரு பகுதியாக இது இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக கடந்த செவ்வாயன்று, வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, கடுமையான மனித உரிமை மீறல்களைத் தொடர ஒரு சுயாதீன வழக்கு தொடுநர் அதிகாரத்தை உறுதி செய்வதற்காக சட்ட மாஅதிபர் அலுவலகத்துக்குள் சீர்திருத்தம் தேவை என்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்திருந்தார்.

இலங்கையில் சட்ட மாஅதிபருக்கு வழங்கப்பட்டுள்ள வழக்கு தொடரும் விருப்புரிமை, பொலிஸ்துறையின் வரையறுக்கப்பட்ட புலனாய்வுத் திறன், தகுதிவாய்ந்த தடயவியல் நிபுணர்கள் இல்லாமை மற்றும் தமிழ் பேசும் அதிகாரிகளின் வெற்றிடங்கள் ஆகியவை பாதிக்கப்பட்டவர்கள் நீதியைப் பெறுவதைக் கூட்டாகத் தடுக்கின்றன மற்றும் தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கின்றன என்று அவரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் அரசாங்கம் தனது கொள்கை அறிக்கையில் சட்ட மாஅதிபர் திணைக்களத்தில் இருந்து சுயாதீனமான பொது வழக்கு தொடரும் பணியகத்தை அறிமுகப்படுத்துவதாக உறுதியளித்துள்ளது என்பதையும் ஆணையாளரின் அறிக்கை சுட்டியிருந்தது.

ஏற்கனவே மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ரேர்க், இந்த ஆண்டு ஜூன் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்தபோது சட்ட மாஅதிபர் பாரிந்த ரணசிங்கவை சந்தித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# உலகை சுற்றிவரும் பயணத்திலுள்ள ஆஸியின் இளம் விமானி கொழும்பில் தரையிறங்கினார்!




கொழும்பு, ஓக. 19

உலகைச் சுற்றி வந்த இளைய துணை விமானியாக மாறுவதற்கான வரலாற்று முயற்சியில் இறங்கியுள்ள 15 வயதான பிரிஸ்பேனைச் சேர்ந்த பைரன் வாலர் கொழும்பில் பாதுகாப்பாக தரையிறங்கினார்.


கொழும்பு, இரத்மலானை விமான நிலையத்தை வந்தடைந்த அவரை விமான நிலைய அதிகாரிகள் ஊக்கத்துடன் வரவேற்றனர்.

இந்தியப் பெருங்கடலில் 11 மணி நேர விமானப் பயணத்திற்குப் பின்னர் ஞாயிற்றுக்கிழமை பைரன் வாலர் விமான நிலையத்தை வந்தடைந்ததாக இரத்மலானை விமான நிலையம் ஓர் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

பைரன் 45,000 கிலோ மீற்றர்கள், ஏழு கண்டங்களிலும் 30 நாடுகளை சுற்றிவர சுமார் இரண்டு மாதங்கள் எடுக்கும் ஒரு பயணத்தை மேற்கொள்கிறார்.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் மீது அதிக அக்கறை காட்டுவார்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி உங்கள் கோரிக்கையை ஏற்பார். தைரியம் கூடும்.

**இடபம்**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். உறவினர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மனஇறுக்கங்கள் உருவாகும். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். இடர்பாடுகளை சமாளிக்க வேண்டியிருக்கும். நிதானம் தேவைப்படும் நாள்.

**கடகம்**
சில வேலைகளை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். வாகனம் பழுதாகும். வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிக்கப்பாருங்கள். மேலதிகாரிகளிடம் பிரச்னைகள் வரக்கூடும்.

**சிம்மம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். ஆன்மிக பெரியோரின் ஆசிகிட்டும். பெற்றோரின் ஆதரவு பெருகும். உங்களால் புதிய பொறுப்புகள் தேடி வரும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**கன்னி**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். சவால்களில் வெற்றி பெறும் நாள்.

**துலாம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். அதிர்ஷ்டம் பெருகும் நாள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்துசெல்லும். தன்னம்பிக்கை குறையும். உங்கள் மீது சிலர் வீண்பழிசுமத்துவார்கள். வளைந்து போக வேண்டும்.

**தனுசு**
உற்சாகமாக எதையும் செய்ய தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெறுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு சில ஆலோசனைகள் தருவீர்கள். நன்மை கிட்டும்.

**மகரம்**
குடும்பத்தில் உள்ளவர்களுக்கு வளைந்து கொடுத்து செல்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். உங்களின் புதிய முயற்சிகளை பாராட்டுவார்கள். வெற்றி கிட்டும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டாகும். உத்தியோகத்தில் அமைதி நிலவும். புதுமை படைக்கும் நாள்.

**மீனம்**
தடைகளைக் கண்டு தளரமாட்டீர்கள். தாய்வழி உறவினர்களால் மனஸ்தாபம் வந்து நீங்கும். பவியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும்.




# உயர் சேவையாளர்கள், சாதனையாளர்கள் மலரும் மூளாய் அமையத்தால் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 19

மலரும் மூளாய் அபிவிருத்தி அமையத்தின் உயர் சேவையாளர்கள் மற்றும் சாதனையாளர்கள் கௌரவிப்பு விழா அந்த அமையத்தின் தலைவர் திருமதி அம்பிகை ஜீவேஸ்வரன் தலைமையில் கடந்த 16 ஆம் திகதி மூளாய் சித்தி விநாயகர் கலையரங்கில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனும் சிறப்பு விருந்தினர்களாக சங்கானை பிரதேச செயலாளர் திருமதி கவிதா உதயகுமார் மற்றும் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி யமுனா ராஜசீலன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக கணித ஆசிரியர் கணபதிப்பிள்ளை தளையரட்ணமும் கலந்து கொண்டனர்.

உயர் சேவையாளர்களாக ஓய்வு பெற்ற அதிபர் திருமதி சுந்தரபாரதி சிவமலர், கிராம உத்தியோகத்தர் நடராஜா சிவரூபன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டதுடன் விளையாட்டுத் துறையில் தேசிய சாதனை படைத்தவர்களும் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், க. பொ. த. சாதாரண தரம் மற்றும் உயர்தரத்தில் அதி திறமைச் சித்தியடைந்த மாணவர்களும் அரசாங்க அதிபர் மற்றும் விருந்தினர்களால் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் மூளாய் கிராமத்தின் மக்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். (எ)

# நாவற்குழியில் "யானை செய்த படலம்" திருவிளையாடல் புராண சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக. 19

நாவற்குழி தெற்கு அருள்மிகு பெரும்படை அம்மன் ஆலயத்தில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 19 எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதி முனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும் இளஞ்சைவப்புலவர் க. கயிலைவாசன் "யானை செய்த படலம்" என்னும் தலைப்பில் நிகழ்த்தும் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

# ஆதீனத்தில் தெய்வீகக்கலை அர்ச்சனை: முருக நாம பஜனை, நடன சமர்ப்பணம்

யாழ்ப்பாணம், ஓக. 19

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்த சுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் கடந்த 29 ஆம் திகதி தொடக்கம் எதிர் வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் காலை 10.00 மணிக்கு "தெய்வீகக் கலை அர்ச்சனை" நிகழ்வை நடத்தி வருகின்றது. அந்தவகையில் இன்று செவ்வாய்க்கிழமை மட்டுவிலூர் திருமதி சங்கீதா ரவிசங்கர், திருமதி ஆரணி பாலச்சந்திரனின் முருக நாம பஜனை நிகழ்வும் பவனுஜா பவானந்த சர்மா வழங்கும் நடன சமர்ப்பணம் நிகழ்வும் நடைபெறும். இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அழைப்பு விடுத்துள்ளார். (எ)

# தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் அன்னதானத்துக்காக பிடியரிசித் திட்டம்


யாழ்ப்பாணம், ஓக. 19

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் அன்னதானத்துக்காக பிடியரிசித் திட்டம் தேவஸ்தான தலைவர், செஞ்சொற்செல்வர், கலாநிதி ஆறு திருமுருகனால் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வருடாந்த மஹோற்சவ நாட்களில் தினமும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் உள்ள அன்னசத்திரத்தில் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

இம்முறையும் அன்னதானம் வழங்கப்படுவதற்குரிய அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

அடியார்களே! எங்கள் தேவஸ்தானத்தில் பாத்திரம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் வீடுகளிலிருந்து ஒரு கைப்பிடி அரிசி எடுத்து வந்து அந்த பாத்திரத்தில் போட்டு அடியார்களுக்கு உணவு கொடுக்கும் மிக உயர்ந்த புண்



ணிய கருமத்தில் பங்கெடுத்து கொள்ளுமாறு கலாநிதி ஆறுதிருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (எ-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.பிக்களின் ஓய்வூதியத்தை குறைக்கும் முடிவை மறுபரிசீலனை செய்யவேண்டும்!

## அரசை வலியுறுத்துகிறார் கரு ஜயசூரிய

கொழும்பு, ஓக. 19

**முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தைக் குறைக்கும் முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு ஓய்வுபெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் சங்கத்தின் தலைவரும், முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.**

தற்போது, சுமார் 490 ஓய்வு பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களும், உயிரிழந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் மனைவிமார்களும் இந்த ஓய்வூதியப் பலனைப் பெறுகின்றனர்.

அவர்களில் பெரும்பாலோர் அந்த ஓய்வூதியத்தில் வாழும் மிகவும் ஏழைகள் என்றும், அவர்களில் 4 முன்னணி கட்சித் தலைவர்கள் இருப்பதாகவும் கரு ஜயசூரிய கூறினார்.

மக்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவரும் திருடர்கள் அல்லது மோசடி செய்பவர்கள் அல்ல என்பதால், மிகவும் கடினமான வாழ்க்கையை வாழும் இந்த மக்களிடம் அவர்கள் கருணையுடன் நடத்தப்பட வேண்டும் என்றும், ஓய்வுபெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பா போன்ற பல நாடுகளில் நடைமுறையில் உள்ள ஒரு நடைமுறை என்றும் முன்னாள் சபாநாயகர் கூறினார்.

சில முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்த ஓய்வூதியத்திலிருந்து உணவு மற்றும் மருந்தைப் பெறுகிறார்கள் என்றும் அவர் கூறினார்.

ஓய்வூதியம் குறித்து இறுதி முடிவை எடுப்பதற்கு முன் அரசாங்கம் இந்தப் பிரச்னைகளிலும் கவனம் செலுத்தவேண்டும் என்றும் கரு ஜயசூரிய மேலும் கூறினார். (அ)

# பிரதி பொலிஸ்மா அதிபரின் மனைவி உட்பட 8 பேர் கைது!

கொழும்பு, ஓக. 19

புதையல் தோண்டியமை தொடர்பாக, அநுராதபுரம் பொலிஸ் அதிகாரிகளால் பிரதி பொலிஸ்மா அதிபரின் மனைவி உள்ளிட்ட 8 பேர் கைது செய்யப்பட்டபோது, பிரதி பொலிஸ்மா அதிபரும் அநுராதபுரத்தில் இருந்தார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

அநுராதபுரத்தில் பால் காணிக்கை வழங்கும் நிகழ்வில் கலந்து கொள்வதாக கூறி, பிரதி பொலிஸ்மா அதிபர், மேலதிகாரிகளிடம் கடந்த 13 ஆம் திகதி அனுமதி பெற்றுள்ளார்.

பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய பதவியேற்ற விழாவில் பங்கேற்க நிச்சயமாக வருவேன் என்றும் அவர் தனது மேலதிகாரிகளிடம் கூறியுள்ளார்.

காலை 5 மணிக்கு காணிக்கை வழங்கும் நிகழ்வு நடத்தப்பட்டாலும், அது முடிந்து காலை 5.30 மணிக்கு அநுராதபுரத்திலிருந்து கொழும்புக்கு வருகை தந்தாலும், குறைந்தது 3 மணி நேரத்துக்கும் மேலாகும்.

பொலிஸ் தலைமையகத்தில் பொலிஸ்மா அதிபர் பதவியேற்ற விழா காலை 7 மணியளவில் ஆரம்பமாகியது.

எனினும், காலை 7.30 மணிக்கு பொலிஸ்மா அதிபர் பொலிஸ் தலைமையகத்துக்கு செல்லும்போது குறித்த பிரதி பொலிஸ்மா அதிபரும் கலந்து கொண்டிருந்தார்.

ஆனால், பால் காணிக்கை செலுத்திய பிறகு, குறித்த நேரத்தில் அநுராதபுரத்திலிருந்து கொழும்புக்கு வர முடியுமா என்பது குறித்து பொலிஸ் அதிகாரிகள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது.

இருப்பினும், 14 ஆம் திகதி அதிகாலையில் அநுராதபுரம் பொலிஸாரால் அவரது மனைவி கைது செய்யப்பட்ட பின்னரே, அவர் பொலிஸ்மா அதிபர் கடமைப் பொறுப்பேற்கும் விழாவில் கலந்து கொண்டார்.

அத்துடன் தனது மனைவி உள்ளிட்ட குழுவினர் கைது செய்யப்பட்ட பிறகு, அநுராதபுரம் பொலிஸ் தலைவருக்கு தொலைபேசி அழைப்பு விடுத்து, தனது மனைவியைக் காப்பாற்ற அழுத்தம் கொடுத்ததாகக் கூறப்படுகிறது. (அ)

# முத்தையன்கட்டு இளைஞர் மரணம் நடுநிலையான விசாரணை தேவை

## ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

கொழும்பு, ஓக. 19

முத்தையன்கட்டு பகுதி இளைஞன் மரணம் குறித்து அரசாங்கம் நடுநிலையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். யுத்தம் முடிவடைந்த பின்னரும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் அதிபாதுகாப்பு வலயமாக இராணுவத்தால் அடையாளப் படுத்தப்படுவது நாட்டின் நல்லிணக் கத்துக்கும்,சகவாழ்வுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்தின் உண்மையை வெளிப்படுத்துவதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கத்தோலிக்க சபைக்கும், நாட்டு மக்களுக்கும் தொடர்ச்சியாக வாக்குறுதி வழங்கியுள்ளார்.

குண்டுத்தாக்குதல் விவகாரம் தொடர்பில் அரசாங்கம் முன்னெடுத்த விசாரணைகளை அரசாங்கம் விசாரணை செய்ய வேண்டிய நிலை காணப்படுவதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான பின்னணியில் தான் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வந்துள்ளோம்.

பிரதி பாதுகாப்பு அமைச்சரின் விடயதானங்கள் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்படாத காரணத்தால் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வர முடியாது என என்று ஆளும் தரப்பினர் குறிப்பிடுகின்றனர்

ஜனாதிபதி வெளிநாடுகளுக்கு பயணம் செய்யும் போது பாதுகாப்பு பதில் அமைச்சராக அருண ஜயசேகர பதவி வகித் துள்ளார்.

ஆகவே இவ்விடயத்தில் அவரது விடயதானம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை என்று ஆளும் தரப்பினரால் குறிப்பிட முடியாது.

முத்தையன்கட்டு பகுதியை சேர்ந்த இளைஞன் மரணம் தொடர்பில் அரசாங்கம் நடுநிலையான முறையில் விசாரணை செய்து உண்மையை பகிரங்கப் படுத்த வேண்டும்.

யுத்தம் முடிவடைந்த பின்னரும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் அதிபாதுகாப்பு வலயமாக இராணுவத்தால் அடையாளப்படுத்தப்படுவது நாட்டின் நல்லிணக்கத்துக்கும்,சகவாழ்வுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட வேண்டும்-என்றார். (அ)

# பிரசன்ன ரணவீர தொடர்ந்தும் விளக்கமறியலில்

கொழும்பு, ஓக. 19

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர எதிர்வரும் 25 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கிரிபத்கொடை பகுதியில் உள்ள அரச காணியை போலி பத்திரங்களைப் பயன்படுத்தி விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்தநிலையில் அவர் மஹர நீதவான் நீதிமன்றத்தினால் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

# கல்வி அமைச்சில் இருந்து மாயமாகிய வாகனங்கள்

கொழும்பு, ஓக. 19

கல்வி அமைச்சில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட வாகனங்கள் காணாமற்போயுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தேசிய கணக்காய்வுத் திணைக்களம் கல்வி அமைச்சு தொடர்பில் வெளியிட்டுள்ள கணக்காய்வு அறிக்கையில் இந்த விவரங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன.

கல்வி அமைச்சின் செயலாளரின் பெயரில் இறக்குமதி செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்ட வாகனங்களே காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதன்படி, சுமார் 139 வரையான வாகனங்கள் காணா மற்போயுள்ளதாக கூறப்படுகிறது.

# செம்மணி மனித புதைகுழி விடயம் அரசு நீதியை நிலைநாட்டவேண்டும்!

## கணபதி கனகராஜ் கோரிக்கை

கொழும்பு, ஓக. 19

செம்மணி மனித புதைகுழி விவகாரத்தில், நீதியை நிலைநாட்டுவதற்குத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னின்று செயற்பட வேண்டுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவர் கணபதி கனகராஜ் வலியுறுத்தியுள்ளார்.

ஹற்றனில் நடைபெற்ற ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் மூன்றாவது தேசிய மாநாட்டில் கலந்து கொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த நிலையில், தேசிய மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துரைத்த, நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன், மலையகத்தின் பிரச்னைகள் தீரவேண்டுமானால், கல்வியே சிறந்த ஆயுதமெனக் கூறியுள்ளார். (அ)

# தியத்தலாவை வைத்தியசாலையை ஏ தரத்திற்கு தரமுயர்த்த நடவடிக்கை

கொழும்பு, ஓக. 19

தியத்தலாவை ஆதார வைத்தியசாலையை ஏ தரத்திற்கு தரமுயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

தியத்தலாவை வைத்தியசாலையின் சிறப்பு ஆய்வு சுற்றுப்பயணத்தில் பங்கேற்றபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மக்கள் தொகை, இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுலாவுக்கு முன்னுரிமை அளிக்கும் தியத்தலாவை பகுதியின் சுகாதார நிலை மேம்படும் எனவும் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ)

# யானை மீது மோதியது வான்! விபத்தில் ஆறு பேருக்கு காயம்!!

கொழும்பு, ஓக. 19

மாத்தறை - மொனராகலை பிரதான வீதியில் தனமல்வில, கித்துல்கொட பிரதேசத்தில் காட்டு யானை மீது மோதி வான் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளதாக தணமல்வில பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று திங்கட்கிழமை காலை 05.00 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நிட்டம்புவையிலிருந்து மொனராகலை நோக்கிப் பயணித்த வான் ஒன்றே விபத்துக்குள்ளாகியுள்ளது.விபத்தின் போது வேனில் பயணித்த 6 பேர் காயமடைந் துள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர்.

இதனையடுத்து, விபத்தில் சிக்கிய காட்டு யானை அருகிலிருந்த காட்டுப் பகுதிக்குள் ஓடிச் சென்றதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பில் தனமல்வில பொலிஸார் மற்றும் தனமல்வில வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பொலிஸ் மா அதிபரின் வட்ஸ் அப் இதுவரையில் 3000 முறைப்பாடுகள்

கொழும்பு, ஓக. 19

புதிய பொலிஸ் மா அதிபராக பிரியந்த வீரசூரிய நியமிக்கப்பட்ட பின்னர், பொலிஸாரின் தவறான நடத்தைகள், குற்றங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் செய்வதற்காக 0718598888 என்ற வட்ஸ் அப் இலக்கத்தை அறிமுகப்படுத்தியிருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் வரை பொதுமக்களிடமிருந்து குறித்த எண்ணுக்கு கிட்டத்தட்ட 3000 முறைப்பாடுகள் அனுப்பப்பட்டுள்ளன.

இந்த வட்ஸ் அப் இலக்கம் கடந்த 13ஆம் திகதி அறிமுகப் படுத்தப்பட்டது. இவ்வளவு குறுகிய காலத்துக்குள் பொது மக்களிடமிருந்து இத்தனை முறைப்பாடுகள் அனுப்பப்பட்டுள்ளன.

பொலிஸார் தொடர்பான பல தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் தகவல் தொடர்பான உண்மைத்தன்மையை அறிய ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான வுட்லர் தெரிவித்தார்.

இந்த வட்ஸ் அப் எண்ணுக்கு தகவல்கள் மற்றும் புகைப்படங்களை மட்டுமே அனுப்ப முடியும். அழைப்புக்களை எடுக்க முடியாது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்ள அரசுக்கு பலமில்லை!

## கூறுகிறார் முஜ்பூர் ரஹ்மான்

கொழும்பு, ஒக. 19

**பாதுகாப்பு பிரதியமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான விவாதத்தின்போது பல உண்மைகள் வெளிப்படும் என்ற அச்சத்தினாலேயே, அரசாங்கம் அதனைத் தவிர்க்க முயற்சிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் முஜ்பூர் ரஹ்மான் குற்றம் சுமத்தியுள்ளார்.**

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளவும், அதனை எதிர்கொள்ளவும் அரசாங்கத்துக்கு பலம் இல்லை என அவர் கூறினார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முற்றிலும் தவிர்ப்பதற்கு அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில், ஐக்கிய மக்கள் சக்தியும் அதற்கான உரிய பதில் நடவடிக்கைகளை எடுக்கும் முஜ்பூர் ரஹ்மான் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த தீர்மானம் முன்வைக்கப்பட்டதில் பல காரணிகள் உள்ளதாகவும், அவற்றை ஆராயாது, அரசாங்கம் தொடர்ந்தும் அதனைத் தவிர்த்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

பாராளுமன்றுக்கு பொறுப்புக்கூறவேண்டிய பிரதியமைச்சர் மீதும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர முடியும் என்பதைக் கருத்திற் கொண்டு, அரசாங்கம் குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள முன்வர வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பான விவாதத்தை அரசாங்கம் ஏன் தொடர்ச்சியாகத் தவிர்த்து வருகிறது என்ற விடயத்தைப் பொதுமக்கள் சிந்திக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் முஜ்பூர் ரஹ்மான் வலியுறுத்தியுள்ளார். (அ)

# பங்களாதேஷ் வங்கி கொள்ளை இலங்கையர்களுக்கும் தொடர்பு

கொழும்பு, ஒக. 19

பங்களாதேஷில் இடம்பெற்ற வங்கிக் கொள்ளையில் இலங்கை உள்ளிட்ட ஐந்து நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டுள்ளதாக, பங்களாதேஷ் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கொள்ளையில் ஈடுபட்டவர்களில் இலங்கை, பிலிப்பைன்ஸ், சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய நாட்டவர்களும் அடங்குவதாக, சிரேஷ்ட அதிகாரியை மேற்கோள் காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பங்களாதேஷில் இடம்பெற்ற வங்கிக் கொள்ளை தொடர்பில், கடந்த 9 வருடங்களாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், குறித்த கொள்ளைச் சம்பவத்தில் பல வங்கி அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள், வங்கியின் தொழில்நுட்பத்துறையைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் மத்திய வங்கியின் உயர் அதிகாரிகள் சிலரும் இந்தக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளதாகக் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறித்த கொள்ளையின்போது, வங்கி கட்டமைப்பை ஊடுருவுவதற்கு அதிநவீன தொழில்நுட்பம் பயன்படுத் தப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# மூன்றாம் தவணைக் கல்வி செயற்பாடு நேற்று ஆரம்பம்

கொழும்பு, ஒக. 19

2025 ஆம் ஆண்டுக்கான அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கான மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகளின் முதலாம் கட்டம் நேற்று ஆரம்பமாகியுள்ளது.

அதற்கமைய, மூன்றாம் தவணை கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளின் முதலாம் கட்டம் ஒக்ரோபர் 17 ஆம் திகதி வரை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டம் நவம்பர் 17 ஆம் திகதி முதல் டிசெம்பர் 19 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, முஸ்லிம் பாடசாலைகளுக்கான மூன்றாம் தவணைக்குரிய கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் இம்மாதம் 25 ஆம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பிள்ளையானின் கட்டளையை நிறைவேற்றிய 6 துப்பாக்கிதாரிகளை கைது செய்ய வேட்டை!

கொழும்பு, ஒக. 19

கிழக்கு மாகாணத்தில் கடத்தல்கள், காணாமல் போதல்கள் மற்றும் துப்பாக்கிச் சூடு சம்பவங்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் எனப்படும் பிள்ளையானின் கீழ் பணியாற்றிய ஆறு துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களைக் கைது செய்ய குற்றப் புலனாய்வுத் துறை விசாரணைகளைத் தொடங்கியுள்ளது.

பிள்ளையான் மற்றும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இனியபாரதி எனப்படும் கே. புஷ்பகுமார் ஆகியோரிடம் நடத்தப்பட்ட நீண்ட விசாரணைகளின்போது இந்தக் குழு பற்றிய தகவல்கள் தெரியவந்துள்ளன.

இவர்கள் இருவரும் வெளிப்படுத்திய தகவல்களின் அடிப்படையில், துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட இரண்டு நபர்கள் கடந்த வாரம் மட்டக்களப்பிலும் கொழும்பிலும் கைது செய்யப்பட்டனர்.

2007-2008 காலகட்டத்தில் பிள்ளையானின் தலைமையிலான ஆயுதக் குழு அந்தக் காலகட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டம் மற்றும் கிழக்கு மாகாணத்தில் அரசியல்வாதிகள், அரசு அதிகாரிகள் மற்றும் பொதுமக்களின் ஏராளமான கொலைகள், கடத்தல்கள் மற்றும் காணாமல் போதல்களைச் செய்ததாகத் தகவல் தற்போது வெளியாகியுள்ளதாக குற்றப் புலனாய்வுத் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# இணையவழி கடன் மாபியாவால் பாதிக்கப்பட்டோருக்கு சட்ட உதவி

## சஜித் பிரேமதாஸ உறுதி

கொழும்பு, ஒக. 19

நிதி நெருக்கடியில் உள்ள நாடுகளை இலக்காகக் கொண்டு, வெளிநாட்டு குழுக்களால் இயக்கப்படும் இணையவழி கடன் மாபியாக்கள் மக்களைப் பழிவாங்குவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இந்தக் கடன் நிறுவனங்கள், வட்டி விகிதத்தைக் குறிப்பிடாமல் கடன் வழங்கி, பின்னர் அதிக வட்டி விதித்து, கடனைத் திருப்பிச் செலுத்த முடியாதவர்களை மிரட்டல், நற்பெயருக்கு களங்கம் விளைவித்தல் மற்றும் பேஸ்புக் வழியாக தகவல்களைத் திரித்து குடும்ப வாழ்க்கையை சீரழிப்பதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

'ரட சமக அபி எகட' அமைப்புடனான கலந்துரையாடலில் பேசிய சஜித், இந்தக் கடன் மாபியாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் சட்ட நிபுணர்கள் மூலம் இலவச சட்ட உதவிகளை வழங்குவதாக உறுதியளித்தார். இந்த நிறுவனங்களுக்கு சட்டப் பூர்வமாக பாடம் கற்பிக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த காலங்களில், இந்த சட்டவிரோத கடன் மாபியா குறித்து பாராளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தி குரல் எழுப்பியதன் விளைவாக, கடுமையான ஒழுங்குமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு, இந்த மாபியா ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டது. இருப்பினும், இந்த மோசடி இன்னும் தொடர்வதாகவும், இதற்கு எதிராக தொடர்ந்து போராடுவோம் எனவும் சஜித் பிரேமதாஸ உறுதியளித்தார். (அ)

# கண்டி நகரில் இரவுச் சந்தை சனிக்கிழமை முதல் ஆரம்பம்

கொழும்பு, ஒக. 19

கண்டி நகரில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் "கண்டி தென்றல் இரவு விழா" எனும் இரவு சந்தை முன்னோடித் திட்டம் சனியன்று ஆரம்பிக்கப்பட்டது.

கண்டியை தூங்கா நகரமாக மாற்றுவதற்கான முதல் படியாக, இந்த இரவு சந்தை ஒவ்வொரு சனிக்கிழமையும் செயல்படுத்தப்படும் என்று மத்திய மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, தலதா வீதி மற்றும் கொட்டுகொடெல்ல வீதியில் நடைபெறும் இந்த நிகழ்வு, எதிர்வரும் 23 மற்றும் 30 ஆம் திகதிகளில் இரவு 7 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

"கண்டி நகரத்தை ஒளிரச் செய்வோம்" என்ற கருப்பொருளுடன் முன்னெடுக்கப்படும் இந்த திட்டம், சுற்றுலாப் பயணிகளையும் சிறு வணிகர்களையும் ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மத்திய மாகாண சபை, பிராந்திய பொருளாதார அபிவிருத்தி முகவரகம், கண்டி மாநகரசபை உள்ளிட்ட தரப்புகள் இணைந்து இதனை முன்னெடுக்கின்றன. (அ)

# வயோதிபரின் சடலம் மீட்பு!

கொழும்பு, ஒக. 19

அம்பாந்தோட்டையில் தங்காலை வைத்தியசாலைக்கு அருகிலிருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக தங்காலை பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்ட வயோதிபர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

65 வயது மதிக்கத்தக்க 5 அடி 1 அங்குலம் உயரமுடையவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.வயோதிபரின் சடலம் தங் காலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# முத்தையன்கட்டு சம்பவ விசாரணைக்கு இராணுவம் முழுமையான ஒத்துழைப்பு!

கொழும்பு, ஒக. 19

முத்தையன்கட்டு சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு இராணுவம் முழு ஒத்துழைப்பு வழங்கும் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் வருண கமகே தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.அவர் மேலும் தெரிவிக்கையில்-இராணுவத்தினரால் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்ட நபர், இதற்கு முன்னரும் அதே இராணுவ முகாமுக்குள் கடந்த ஜனவரி 18 ஆம் திகதி அத்துமீறி நுழைந்துள்ளார். பொருட்களை களவாட முற்பட்டமை தொடர்பில் அவருக்கு எதிராக முல்லைத்தீவு நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் அவர் மீண்டும் அத்துமீறி நுழைந்துள்ளார். இராணுவ முகாமுக்குள் அத்துமீறி நுழைந்து தப்பியோடிய குழுவில் இருந்த ஒருவரே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்பது சம்பவம் நடைபெற்று மறுநாளே எமக்கு தெரியவந்தது.

அவரின் மரணத்துக்கு இராணுவம் காரணமில்லை என இராணுவ தரப்பின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்தது.

நாம் ஒரு தலைபட்சமாக விசாரணை நடத்தவில்லை. பொலிஸாரால் முன்னெடுக்கப்படும் விசாரணைக்கும் ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. எதிர்காலத்திலும் வழங்கப்படும்-என்றார். (அ)

# உலர் மீன் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை

கொழும்பு, ஒக. 19

உலக சந்தைக்கு ஏற்ற வகையில் உலர் மீன் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஐரோப்பா, கனடா மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு உலர் மீன்களை ஏற்றுமதி செய்யத் திட்டங்கள் அறிமுகப் படுத்தப்படவுள்ளதாகக் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சு தெரிவித்தது.

ஏற்றுமதிக்கான உலர் மீன் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக நவீன தொழில்நுட்பம், உபகரணங்கள் மற்றும் நிதி வசதிகளை வழங்குவதில் கவனம் செலுத்தப்படுத்தப்பட் டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100 அரசியல்வாதிகளிடம் விசாரணைகள் ஆரம்பம்!

## வருமானத்துக்கு அதிகமான சொத்து சேர்த்த குற்றச்சாட்டில்

கொழும்பு, ஓக. 19

**வருமானத்திற்கு அதிகமான சொத்துக்களை சம்பாதித்துள்ள சுமார் 100 அரசியல்வாதிகள் குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.**

கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழு மற்றும் சட்ட விரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவு என்பன இணைந்தே இந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

அரசியலுக்கு பிரவேசித்த போது சாதாரண நிலையில் இருந்த அரசியல்வாதிகள் திடீரென செல்வந்தர்களாக மாறியதைக் கருத்திற் கொண்டு இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட சில அரசியல்வாதிகளின் சொத்துக்கள் அவர்களின் உறவினர்கள் மற்றும் நெருங்கியவர்களின் பெயர்களில் இருப்பதும் தெரியவந்துள்ளது. (அ)

# பொது வேட்பாளர் ஜி.எல்.பீரிஸ் அல்லர்!

கொழும்பு, ஓக. 19

எதிரணிகளை ஒன்றிணைக்கும் முயற்சியில் இறங்கியுள்ள பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் அல்லர் என்று முன்னாள் அமைச்சர் சுனில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

எதிரணிகளை பொதுவானதொரு மேடைக்கு கொண்டு வரும் முயற்சியே இடம்பெறுகின்றது. சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபுணராக பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இருக்கின்றார். அதனால் அவர் இதில் பங்கெடுத்துள்ளார். இம்முயற்சியின் தலைவரோ அல்லது அடுத்த ஜனாதிபதி வேட்பாளரோ அவர் அல்லர். இது தொடர்பில் அவருக்கு எவ்வித விருப்பமும் இல்லை.

தற்போதைய அரசாங்கத்துக்கு மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். கொள்கையை ஏற்றதால்தான் ஆணை வழங்கினர்.

எனவே, பதவிகாலம்வரை அரசாங்கம் பயணிப்பதற்கு இடமளிக்க வேண்டும்-என்றார். (அ)

# தனிப்பட்ட தகராறு ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஓக. 19

திவுலப்பிட்டிய, துனகஹா பகுதியில் மூன்று பேர் நடத்திய தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தனிப்பட்ட தகராறு காரணமாக குறித்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன், கத்தி மற்றும் பொல்லுகளால் தாக்கப்பட்டு பலத்த காயமடைந்த நபர் திவுலப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் கம்பஹா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

மடம்பலே பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேலும், சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்களையும் கைது செய்ய திவுலப்பிட்டிய பொலிஸார் குழுவொன்றை நியமித்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# மேல் மாகாண மருத்துவ நிபுணர்கள் இன்று தொடக்கம் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஓக. 19

மேல் மாகாணத்தில் உள்ள 31 மருத்துவமனைகளில் பணிபுரியும் அனைத்து நிறைவுகாண் மருத்துவ நிபுணர்களும் இன்று செவ்வாய்க்கிழமை முதல் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கவுள்ளதாக நிறைவுகாண் மருத்துவ நிபுணர் சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

கடுமையான முரண்பாடுகளுடன் தயாரிக்கப்பட்ட "இடமாற்ற உத்தரவு 2024" ஐ வெளியிட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் உத்தரவிட்டதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அந்த கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு வருடத்திற்கும் மேலாக இடமாற்ற செயல்முறை குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்ட போதிலும், எந்த தீர்வும் எட்டப்படவில்லை.

இந்த இடமாற்ற விதிமுறைகள் செயல்படுத்தப்பட்டால், மருத்துவமனைகளில் 24 மணிநேர சேவைகளை பராமரிக்க முடியாது. இதனால் ஊழியர்கள் மற்றும் நோயாளர்களுக்கு பெரும் சிரமம் ஏற்படும்.

இந்தப் பிரச்னை தொடர்பாக மேல் மாகாண ஆளுநர் உள்ளிட்ட பொறுப்பான அதிகாரிகளின் கவனத்திற்கு பல முறை கொண்டு சென்ற போதிலும், இதுவரை எந்த தீர்வும் பெற்றுக் கொடுக்கப்படவில்லை என்றும் நிறைவுகாண் மருத்துவ நிபுணர் சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (அ)

# பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்த தபால் தொழிற்சங்க முன்னணியினர்!

கொழும்பு, ஓக. 17

தபால் மற்றும் ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியினர் 24 மணித்தியால பணிப்பகிஷ்கரிப்பினை முன்னெடுத்த நிலையில் நாடளாவிய ரீதியில் 653 தபாலகங்கள், 3610 உப தபால் நிலையங்கள் ஆகியவற்றின் ஊழியர்கள் கடமையிலிருந்து விலகிச் செயற்பட்டதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியின் இணை ஏற்பாட்டாளர் சிந்தக்க பண்டார தெரிவித்துள்ளார்.

தபால் ஊழியர்களின் கொடுப்பனவு, உள்ளிட்ட 19 கோரிக்கைகளை முன்வைத்து தபால் மற்றும் தொலைத் தொடர்பு அதிகாரிகள் சங்கம் மற்றும் ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியினர் நேற்று முன் தினம் மாலை 4 மணிமுதல் பணிபகிஷ்கரிப்பை முன்னெடுத்தனர்.

அதன்படி, நேற்று முன் தினம் மாலை 4.00 மணிக்கு கொழும்பு மத்திய தபால் பரிமாற்றத்தின் ஊழியர்கள் பணபகிஷ்கரிப்பை ஆரம்பித்திருந்த நிலையில் நேற்று முன் தினம் நள்ளிரவு 12 மணி முதல் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து தபால் நிலையங்களில் உள்ள ஊழியர்கள் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

தபால் மற்றும் தொலைத் தொடர்பு அதிகாரிகள் சங்கம் ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி இணைந்து பணிபகிஷ்கரிப்பினை முன்னெடுத்துள்ளன.

இதேவேளை அனைத்து தபால் ஊழியர்களினதும் விடுமுறை நேற்று முன்தினம் முதல் ரத்து செய்யப்பட்டுள்ளதுடன் பணிப் பகிஷ்கரிப்பை மேற்கொள்வது நியாயமற்ற விடயமாகும் என தபால் மா அதிபர் எஸ்.ஆர். டபிள்யூ.எம்.ஆர்.பி.சத்குமார சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# நம்பிக்கையில்லாப் பிரேரணை நிராகரிக்கப்படும் சாத்தியம்!

கொழும்பு, ஓக. 19

பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஹருண ஜயசேகரவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை நிராகரிக்கப்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

சட்ட சிக்கலை நிலைமையை அடிப்படையாகக் கொண்டே இது பற்றி நடவடிக்கை எடுக்கப்படலாம் எனவும், பிரேரணை தொடர்பில் சட்டமா அதிபரிடம் சபாநாயகர் அலுவலகம் சட்ட விளக்கம் கோரியுள்ளது எனவும் தெரியவருகின்றது.

இதனால் நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்ற ஒழுங்கு புத்தகத்தில் உள்ளடக்கப்படுவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது எனவும் அறியமுடிகின்றது.

அருண ஜயசேகர பிரதி அமைச்சராக பதவி வகிக்காத காலப்பகுதியில் இடம்பெற்ற தாக்க் கூறப்படும் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர முடியுமா என ஆளுங்கட்சி தரப்பில் கேள்வி எழுப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கை வரலாற்றில் பிரதி அமைச்சர் ஒருவருக்கு எதிராக இதற்கு முன்னர் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படவில்லை எனவும், பிரதி அமைச்சர் என்பவர் அமைச்சரவை கூட்டு பொறுப்பு அற்றவர் எனவும் ஆளுங்கட்சி தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும், ஜனாதிபதி வெளிநாடு செல்லும்பட்சத்தில் பதில் பாதுகாப்பு அமைச்சராக பிரதி அமைச்சரே செயற்படுகின்றார். எனவே, பிரேரணை கொண்டுவர முடியும் என ஐக்கிய மக்கள் சக்தி தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்த பாராளுமன்ற அமர்வின்போது இது பற்றி சபாநாயகர் தெளிவுபடுத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# ஒக்கம்பிட்டி பொலிஸ் பொறுப்பதிகாரி தாக்கல் செய்த பிணை மனு நிராகரிப்பு

கொழும்பு, ஓக. 19

மணல் வியாபாரி ஒருவரிடமிருந்து 40 ஆயிரம் ரூபாய் இலஞ்சம் பெற்ற சம்பவம் தொடர்பில், கைது செய்யப்பட்ட கொழும்பு ஒக்கம்பிட்டிய பொலிஸ் பொறுப்பதிகாரியின் பிணை மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, சந்தேக நபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, சந்தேக நபரின் மகள் இந்த வருடம் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளதாகவும், இதனைக் கருத்தில் கொண்டு சந்தேக நபரை பிணையில் விடுவிக்குமாறு நீதிமன்றில் கோரிக்கை விடுத்தார்.

சந்தேக நபருக்கு எதிரான விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால், பிணை வழங்குவதற்கு ஆட்சேபனை தெரிவிப்பதாக இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் மன்றுக்கு அறிவித்தனர்.

இரு தரப்பினரும் முன்வைத்த விடயங்களை பரிசீலித்த கொழும்பு பிரதான நீதவான், சந்தேக நபரின் பிணை கோரிக்கையை நிராகரித்தார். (அ)

# கரையோர ரயில் சேவை பாதிப்பு

கொழும்பு, ஓக. 19

கரையோர ரயில் சேவையின் போக்குவரத்துக்கு வாதுவ அருகே இடையூறு ஏற்பட்டுள்ளது.

களுத்துறை தெற்கிலிருந்து மருதானை நோக்கி பயணித்த ரயிலில் வாதுவ அருகே இயந்திரக் கோளாறு ஏற்பட்டமையே இதற்கான காரணம் என ரயில் கட்டுப்பாட்டு அறை தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், இயந்திர கோளாறை சீர் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்படுவதாவும் கரையோர அலுவலக ரயில் சேவைகள் தாமதித்தே இடம்பெற்றாதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மீன்பிடிக்கச் சென்றவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு!

கொழும்பு, ஓக. 19

செவனகல பகுதியில் ஹபுருகலை போதிராஜ குளத்தில் மூழ்கி நபரொருவர் உயிரிழந்தார்.

செவனகல மஹகம பகுதியைச் சேர்ந்த 42 வயதான நபரே சம்பவத்தில் மரணித்தார்.

குறித்த நபர் மற்றொரு நபருடன் குளத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது ஒரு குழியில் விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சடலம் எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் குறித்து செவனகல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் ஜனாதிபதியாக வந்தால் சகல பிரச்னைகளுக்கும் தீர்வு

## நாமல் ராஜபக்ஷ எம். பி. சொல்கிறார்



உகண, ஒக. 19

**எதிர்காலத்தில் நான் ஜனாதிபதியாக வந்தால் மக்கள் எதிர்கொள்ளும் அனைத்து பிரச்னைகளுக்கும் தீர்வு கிடைக்கும் என்று சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

அம்பாறை மாவட்டத்துக்கு நேற்று முன்தினம் சென்ற நாமல் ராஜபக்ஷ, உகண பிரதேச மக்களை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இந்தச் சந்திப்பின் போது, மக்கள் தங்கள் வாழ்க்கை நிலைச் சிக்கல்கள், சமூக தேவைகள், கல்வி மற்றும் சுகாதார வசதிகள், வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல பிரச்னைகளை நேரடியாக முன்வைத்ததுடன், எதிர்காலத்தில் நீங்கள் ஜனாதிபதியாக வரவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளை கேட்டறிந்த நாமல் ராஜபக்ஷ, எதிர்காலத்தில் தான் ஜனாதிபதியாக வந்தால் மக்களின் கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றுவேன் என்று வாக்குறுதியளித்தார்.

கிராம அபிவிருத்தியும் இளைஞர்களின் முன்னேற்றமும் நாட்டின் எதிர்காலத்துக்குத் துணைபுரியும். எனவே, மக்கள் மற்றும் அரசாங்கத்துக்கிடையே நெருக்கமான ஒத்துழைப்பு அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில், பொதுஜன பெரமுனவின் முன்னாள் அமைச்சர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, டி. வீரசிங்க, கட்சியின் முக்கியஸ்தர்கள், உள்ளூராட்சி உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# திருகோணமலை விவசாயிகள் நாடு முழுவதும் போராட்டம்

திருகோணமலை, ஒக. 19

திருகோணமலை - முத்துநகர் விவசாயிகளின் நியாயமான கோரிக்கைக்கு அரசிடமிருந்து உரிய பதில் கிடைக்காவிட்டால் விவசாயிகளை ஒன்றிணைத்து நாடு தழுவிய போராட்டத்தை முன்னெடுக்கத் தயாராக இருப்பதாக முத்துநகர் விவசாயிகள் தெரிவித்தனர்.

முத்துநகர் பகுதியில் விவசாயத்தில் ஈடுபட்டுவந்த விவசாய காணிகளிலிருந்து விவசாயிகளை வெளியேற்றி அவற்றை சோலார் மின் திட்டத்துக்கு வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் தமது காணிகளை தமது விவசாயத்துக்கு மீள வழங்குமாறு கோரியும் கடந்த 14 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக முத்துநகர் விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் தீர்வு வழங்குவதாக விவசாயிகளுடனான கலந்துரையாடலின் போது அரச தரப்பிலிருந்து உறுதிமொழி வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே குறித்த விவசாயிகள் இவ்வாறான கருத்தை வெளியிட்டுள்ளனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இது முத்துநகர் விவசாயிகளுக்கு மாத்திரம் உள்ள பிரச்னை அல்ல. மாறாக இது விவசாய நிலங்களில் சோலாரை பூட்டி அவற்றை மலட்டு நிலங்களாக மாற்றுவதால் பாதிப்படைகின்ற விவசாயினதும், அரிசியை உணவாக உட்கொள்ளுகின்ற ஒவ்வொரு மனிதனுடைய பிரச்னையுமாகும்.

நாங்கள் சோலார் மின் உற்பத்தித் திட்டத்துக்கோ அல்லது நாட்டின் அபிவிருத்திக்கோ எதிரானவர்கள் அல்லர்.

மாறாக பொன் விளையும் பூமியான விவசாயம் மேற்கொள்ளுகின்ற பூமியில் சோலார் மின் திட்டத்துக்கான தொகுதிகளை பூட்டி அவற்றில் விவசாயத்தை மேற்கொள்ளவிடாது அவற்றை மலட்டு நிலங்களாக மாற்றுவதையே நாங்கள் எதிர்க்கின்றோம்- என்றனர். (எ)

# வரோதயநகர் படுகொலையின் 40ஆவது ஆண்டு நினைவு நாள்

திருகோணமலை, ஒக. 19

திருகோணமலை வரோதயநகர் படுகொலையின் 40 ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு படுகொலை செய்யப்பட்ட உறவுகளின் குடும்பத்தினரால் வரோதயநகர் பாதாள வைரவர் ஆலயத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், அன்னதான நிகழ்வும் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது படுகொலை செய்யப்பட்ட 11 பேருக்கும் விசேட ஆத்ம சாந்திப் பூசை இடம்பெற்றதுடன் அன்னதான நிகழ்வும் நடைபெற்றது. குறித்த படுகொலைச் சம்பவத்தில் குணராசா வசிகலா, குணராசா சங்கர், குணராசா கெங்கா, தேசிங்கன் இன்பன், தேசிங்கன் ஜெயந்தி, இராசரெட்ணம் ரபேந்திரராசா, கதிர்காமு நாகேஸ்வரி, வெள்ளையன் திருச்செல்வம், கந்தன் மாணிக்கம், சீனியன் மாணிக்கம் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டனர். காயமுற்ற நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த கதிர்காமு என்பவருடைய எட்டு வயது மகள் காணாமல் போயிருந்தார். (எ)

# சமஷ்டி தீர்வு வழங்கக் கோரி தம்பலகாமத்தில் கவனவீர்ப்பு

தம்பலகாமம், ஒக. 19

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவால் நடைமுறைப்படுத்தப்படும் 100 நாள் செயன்முனைவின் 18 ஆவது நாள் நிகழ்வு நிகழ்வு திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேசத்துக்குட்பட்ட பாரதிபுரம் கிராமத்தில் நேற்று நடைபெற்றது.

பல வழிகளிலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தம்பலகாமம் மக்கள் தொடர்ந்தும் பல உரிமை சார்ந்த பிரச்னைகளை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த நிலையில் நேற்றைய தினம் காலை ஒன்றுகூடிய மக்கள் ஒருங்கிணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத அதிகாரப் பகிர்வுடன் கூடிய சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வை அரசிடம் வலியுறுத்தினர்.

இதன்போது இலங்கை அரசே இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை உறுதி செய் போன்ற வாசகம் தாங்கிய பதாகையை ஏந்தியவாறும் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தீர்வுகளை வலியுறுத்துகிறோம். வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத நிரந்தர அரசியல் தீர்வை பெற்றுத்தாருங்கள் என்று இலங்கை அரசிடம் வலியுறுத்துகின்றோம்- என்றார். (எ-12)

# ஹர்த்தாலுக்கு ஆதரவில்லை! அனைத்தும் இயல்புநிலையில்

காரைதீவு, ஒக. 19



இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியால் நேற்று வடக்கு - கிழக்கில் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் அம்பாறை மாவட்டம் காரைதீவில் போதுமான ஆதரவு வழங்கப்படவில்லை.

அங்கு கடைகள், வர்த்தக நிறுவனங்கள், வங்கிகள் திறக்கப்பட்டு வழமைபோல் இயங்கின. ஒருசில கடைகளே பூட்டப்பட்டிருந்தன.

அனைத்து பாடசாலைகளும் வழமைபோல் இயங்கின. எனினும், மாணவர்களின் வரவு சற்று குறைந்து காணப்பட்டது.

வீதிப் போக்குவரத்துகளில் பஸ் தொடக்கம் சகல வாகனங்களும் ஈடுபட்டன.

மொத்தத்தில் காரைதீவு தமிழ் - முஸ்லிம் பிரதேசங்களில் இயல்புநிலை காணப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் ஆகியோர் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தும்,

அதற்கு மாறாக இவ் இயல்புநிலை காணப்பட்டது.

முல்லைத்தீவு - முத்துஐயன் கட்டு குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்ட இளைஞனின் படுகொலைக்கு நீதி வேண்டியும் வடக்கு - கிழக்கு பகுதியில் வாழும் தமிழர்களுக்கு எதிரான இராணுவக் கெடுபிடிகளை கண்டித்தும் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. (எ-08)

# தொழிற்சங்க போராட்டத்தால் தபால் சேவைகள் முடக்கம்

கல்முனை, ஒக. 19

தபால் மற்றும் தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கம் மற்றும் ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியால் ஆரம்பிக்கப்பட்ட பணிப்புறக்கணிப்பு போராட்டம் நேற்றும் முன்னெடுக்கப்பட்டது.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை தொடங்கினர்.

மத்திய தபால் பரிமாற்றத்தில் தொடங்கிய இந்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் நேற்று முன்தினம் நள்ளிரவு 12. 00 மணி முதல் நாடு தழுவிய அளவில் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக தபால் தொழிற்சங்க முன்னணி தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாடளாவிய ரீதியில் தபாலக தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக நேற்று அம்பாறை மாவட்டத்தில் உள்ள பல தபால் நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் வகையில் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட உப தபால் நிலைய அஞ்சல் அதிபர்கள், ஊழியர்கள் ஆதரவளித்தமையால் தபால் அலுவலக சேவைகள் யாவும் முடங்கின.

இதன்படி அம்பாறை மாவட்டத்தில் கல்முனை பிரதான தபாற்கந்தோர் தவிர 12 தபால் நிலையங்கள் குறித்த பணிப் பகிஷ்கரிப்பு காரணமாக மூடப்பட்டிருந்ததுடன் இவ்வேலை நிறுத்தத்தின் காரணமாக கல்முனை பிரதேச பொதுமக்கள் மற்றும் மாணவர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டதை அவதானிக்க கூடியதாக இருந்தது. (எ-01)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரஷ்யா மீது மேலும் பொருளாதார தடை

## இங்கிலாந்து பிரதமர் எச்சரிக்கை



லண்டன், ஒக. 19

**ரஷ்யா மீது மேலும் பொருளாதாரத் தடைகளை விதிப்போம் என்று இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் எச்சரிக்கை விடுத்துள்ளார். ஜனாதிபதி ஜெலன்ஸ்கி இல்லாமல் உக்ரைன் பிரச்னைக்கான தீர்வை எட்ட முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.**

உக்ரைன் - ரஷ்யா இடையே 3 ஆண்டுகளுக்கு மேலாக போர் நீடித்து வருகிறது. இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வருவது குறித்து அலாஸ்காவில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பும் ரஷ்ய ஜனாதிபதி புடினும் பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால், அதில் எந்த முடிவும் எட்டப்படவில்லை.

இந்த நிலையில், 'விருப்ப கூட்டணி' என்ற பெயரில் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவல் மக்ரோனும் ஜேர்மன் ஜனாதிபதி பிரைட்ரிச் மெர்சும் வீடியோ அழைப்பில் பேசினர். அதில், இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மரும் கலந்துகொண்டார். அப்போது, கெய்ர் ஸ்டார்மர் கூறியதாவது: -

"அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மேற்கொண்ட முயற்சிகள், உக்ரைன் மீதான ரஷ்யாவின் சட்டவிரோத போரை முடிவுக்கு கொண்டு வருவதில் முன்னெப்போதையும் விட நம்மை நெருக்கமாக ஒன்று சேர்த்துள்ளன. உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியை இணைத்து பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும்.

அவர் இல்லாமல் உக்ரைன் பிரச்னைக்கான அமைதி தீர்வை முடிவு செய்ய முடியாது. உக்ரைன் மீதான கொடூரத் தாக்குதலை புடின் நிறுத்தும் வரை, ரஷ்யா மீது மேலும் பல பொருளாதாரத் தடைகளை நாங்கள் விதிப்போம். அவை ரஷ்ய பொருளாதாரத்துக்கும், அதன் மக்களுக்கும் ஏற்கனவே தண்டனையாக அமைந்துள்ளன."- என்றார். (எ)

# பீஹாரில் வாக்குகளை திருட நாம் அனுமதிக்க மாட்டோம்

## ராகுல் காந்தி யாத்திரை ஆரம்பம்



பட்னா, ஒக. 19

பீஹாரில் வாக்குகளை திருட நாங்கள் அனுமதிக்க மாட்டோம். ஏழைகளிடம் மிஞ்சியுள்ளது வாக்குரிமை மட்டுமே. அதையும் பறித்துக்கொள்ள நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினருமான ராகுல் காந்தி தெரிவித்தார்.

பீஹாரில் வாக்காளர் உரிமையை நிலைநாட்டுவதற்கான யாத்திரையை ராகுல் காந்தி நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார். இதற்கான விழாவில், காங்கிரஸ் கட்சி தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, ராஷ்டிரிய ஜனதா தளம் தலைவர்கள், லல்லு பிரசாத் யாதவ், தேஜஸ்வி யாதவ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பீஹாரில் விரைவில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், சசாரமில் தொடங்கிய இந்த யாத்திரையின் மூலம் 1300 கிலோ மீற்றர் தூரம் பயணித்து மக்களிடையே வாக்காளர் திருட்டுக்கு எதிரான பிரசாரங்களை இந்திய கூட்டணி முடுக்கி விட வுள்ளது.

யாத்திரை தொடக்க விழா வின்போது ராகுல் காந்தி கூறுகையில், "இந்த யாத்திரை அரசியலமைப்பை காப்பாற்றுவதற்கான போராட்டம். நாடு முழுவதிலும் சட்டமன்றத் தேர்தல்கள், மக்களவை தேர்தல்கள் திருடப்படுகின்றன.

பீஹாரில் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொண்டு வாக்காளர்களை நீக்குவது மற்றும் சேர்ப்பதன் மூலம் வாக்குகளை திருட ஒரு புதிய சதி செய்யப்பட்டுள்ளது. பீஹாரில் வாக்குகளை திருட நாங்கள் அனுமதிக்க மாட்டோம். ஏழைகளிடம் மிஞ்சியுள்ளது வாக்குரிமை மட்டுமே. அதையும் அவர்கள் பறித்துக்கொள்ள நாங்கள் அனுமதிக்க மாட்டோம்"- என்றார். (எ)

# இராணுவத் தளபாட உற்பத்தி ரூ. 515,325 கோடியாக உயர்வு

## இந்திய பாதுகாப்பு அமைச்சர் தகவல்

புதுடில்லி, ஒக. 19

கொள்கை சீர்திருத்தம், தனியார்நிறுவனங்களுடன்இணைந்து செயல்படுதல், அந்நிய நேரடி முதலீட்டை தாராளமயமாக்கியது ஆகியவற்றால் இந்தியாவின் இராணுவத் தளபாட உற்பத்தி 5 இலட்சத்து 15,325 கோடி ரூபாயை எட்டி சாதனை படைத்துள்ளது.

இந்தியாவின் இராணுவத் தளபாட உற்பத்தி 2024 - 25ஆம் ஆண்டில் 5 இலட்சத்து 15,325 கோடி ரூபாயாக உயர்ந்து புதிய சாதனை படைத்துள்ளது. இது இதற்கு முந்தைய ஆண்டின் உற்பத்தியை விட 18 சதவீதம் உயர்வு. கடந்த 2019 - 20ஆம் ஆண்டு உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 90 சதவீதம் உயர்வு.

இந்த சாதனை குறித்து பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறுகையில், இராணுவத் தளபாட உற்பத்தி 5 இலட்சத்து 15,325 கோடியை எட்டிய தற்கு இராணுவத் தளபாடத் துறை மற்றும் தொழிற் துறையினரின் பங்களிப்பே காரணம். இந்த வளர்ச்சி, உள்நாட்டு இராணுவத் தளபாட உற்பத்தியின் பலத்தை காட்டுவதாகவும், இறக்குமதி குறைந்து இராணுவத் தளபாட ஏற்றுமதியை அதிகரிக்கும் அளவுக்கு நாட்டை கொண்டு சென்றுள்ளது- என்றார். (எ)

# ஜனாதிபதி, பிரதமர் மாற்றமா? செய்தியில் உண்மை இல்லை

## பாகிஸ்தான் இராணுவத் தளபதி மறுப்பு



இஸ்லாமாபாத், ஒக.19

பாகிஸ்தான் ஜனாதிபதியும் பிரதமரும் மாற்றப்படப் போவதாக வெளியாகும் செய்திகளில் உண்மையில்லை என்று அந்த நாட்டின் இராணுவத் தளபதி அசிம் முனீர் தெரிவித்துள்ளார். தான் அரசியல் பதவிகளை விரும்பவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா மேற்கொண்ட ஒப்ரேஷன் சிந்தூர் இராணுவ நடவடிக்கைக்கு பிறகு அந்த நாட்டின் அரசியலில் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. ஒப்ரேஷன் சிந்தூருக்குப் பிறகு இராணுவத் தளபதி அசிம் முனீர் அமெரிக்காவுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டு அந்த நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அதனைத் தொடர்ந்து சில வாரங்களுக்குப் பிறகு இரண்டாவது முறையாகவும் அவர் அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டார்.

இது பாகிஸ்தானில் மட்டுமல்லாது சர்வதேச அளவிலும் ஆழமான விவாதத்தை ஏற்படுத்தியது. ஏற்கனவே, பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரிக்கும் அசிம் முனீருக்கும் இடையே கருத்து மோதல்கள் நிலவி வருவதாக செய்திகள் வெளியாகின. தற்போது, பிரதமர் ஷெபாஸ் ஷெரீப்புக்கும் அசிம் முனீருக்கும் இடையேயும் மோதல் போக்கு நிலவி வருவதாகக் கூறப்படுகிறது. இந்தப் பின்னணியில், பாகிஸ்தானில் ஜனாதிபதி மற்றும் பிரதமரை மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகி வருகின்றன. பாகிஸ்தானில் மீண்டும் இராணுவ ஆட்சி ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறித்தும் பலரும் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், இராணுவத் தளபதி அசிம் முனீர் இதைத் திட்டவட்டமாக மறுத்துள்ளதாக பாகிஸ்தானின் ஜாங் இதழின் கட்டுரையாளர் சுஹைல் வாராய்ச் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் எழுதியுள்ள கட்டுரையில், "இராணுவத் தளபதி அசிம் முனீரின் சமீபத்திய அமெரிக்கப் பயணத்தின் போது பெல்ஜியம் நாட்டுக்கும் சென்றார். தலைநகர் பிரஸ்ஸல்ஸில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசிய அசிம் முனீர், "கடவுள் என்னை நாட்டின் பாதுகாவலராக ஆக்கியுள்ளார். அதைத் தவிர வேறு எந்தப் பதவியையும் நான் விரும்பவில்லை. நான் ஒரு இராணுவ வீரன். எனது மிகப் பெரிய ஆசை நாட்டுக்காக உயிர்துறப்பதே" என தெரிவித்தார்.

பிரஸ்ஸல்ஸ் கூட்டம் தவிர தனிப்பட்ட முறையிலும் என்னுடன் சுமார் 2 மணி நேரம் அசிம் முனீர் பேசினார். அப்போதும், ஜனாதிபதி மற்றும் பிரதமர் மாற்றம் குறித்த செய்தியை அவர் திட்டவட்டமாக மறுத்தார். அத்தகைய வதந்திகள் முற்றிலும் தவறானவை என அவர் கூறினார். நாட்டின் அரசியல் ஒழுங்கை சீர்குலைக்க இத்தகைய வதந்திகள் பரப்பப்படுகின்றன என்றும் அவர் கூறினார்.

இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தானுக்கு எதிராகப் பேசிய அசிம் முனீர், "பாகிஸ்தானின் அமைதியை சீர்குலைக்க இந்தியா முகவர்களைப் பயன்படுத்துகிறது. ஆப்கானியர்களுக்கு நாங்கள் பல ஆண்டுகளாக கருணையையும் சலுகைகளையும் காட்டினோம். ஆனால், அவர்கள் இந்தியாவுடன் இணைந்து எங்களுக்கு எதிராக சதித் திட்டம் தீட்டுகிறார்கள்.

பாகிஸ்தானில் அரிய கனிமங்கள் உள்ளன. இந்த புதையல்களைப் பயன்படுத்துவதன் மூலம் பாகிஸ்தானின் கடனை பெருமளவில் குறைக்க முடியும். மேலும், விரைவில் பாகிஸ்தானும் வளமான நாடுகளில் ஒன்றாக மாறும் என்று அசிம் முனீர் தெரிவித்தார்" என கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# கிளர்ச்சியாளர்கள் மீது இராணுவம் தாக்குதல்

## மியன்மாரில் 21 பேர் பலி

நய்பிடோவ், ஒக. 19

மியன்மாரில் கிளர்ச்சியாளர்கள் மீது இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் 21 பேர் பலியாகினர்.

இராணுவம் நடத்திய தாக்குதலை ஆயுத மேந்திய கிளர்ச்சிக் குழு, உள்ளூர்வாசிகள் உறுதி செய்தனர்.

மியன்மாரில் கடந்த 2021இல் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. அப்போது ரக்கைன் பிராந்தியம் மோசமாக பாதிக்கப்பட்டது. அந்தப் பகுதியைச் சேர்ந்த 7 இலட்சத்து 40 ஆயிரம் ரோஹிங்கியா முஸ்லிம்கள் வெளிநாடுகளுக்கு அகதியாக சென்றனர்.

இதனைத் தொடர்ந்து, இராணுவத்துக்கு எதிராக ஆயுதம் ஏந்திய பழங்குடியின குழுக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன. இந்த நிலையில், மொகோக் நகரில் கிளர்ச்சியாளர்கள் தங்கியிருப்பதாக இராணுவத்துக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து அப்பகுதியில் இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில், கர்ப்பிணிப் பெண் உட்பட 21 பேர் உயிரிழந்தனர்.

மேலும் பலர் படுகாயமடைந்தனர். அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இதில், சிலர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருவதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. (எ)

# இந்தியாவில் தங்க வயல்

புதுடில்லி, ஒக. 19

ஒடிசா மாநிலத்தில் 4 முக்கிய மாவட்டங்களில் இந்திய தொல்லியல் துறை நடத்திய ஆய்வில் 10 முதல் 20 தொன் அளவுக்கு தங்கம் இருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஒடிசாவின் பல மாவட்டங்களில் மண்ணில் புதைந்துள்ள கனிமங்கள் குறித்து இந்திய தொல்லியல் துறை ஆய்வு மேற்கொண்டது. இதில் தியோகர், சுந்தர்கர், நபரங்பூர், கியோன்ஜர், அங்குல் மற்றும் கோராபுட் ஆகிய பகுதிகளில் தங்க கனிமங்கள் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், மயூர்பஞ், மல்கன்கிரி, சம்பல்பூர் மற்றும் பவுத் ஆகிய இடங்களில் ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இதன் காரணமாக ஒடிசா தங்க சுரங்கமாக மாறவுள்ளது. இங்கு 10 முதல் 20 மெட்ரிக் தொன்கள் அளவுக்கு தங்கம் இருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒடிசாவின் பல பகுதிகளில் தங்கம் இருப்பதை, ஒடிசா சுரங்கத் துறை அமைச்சர் கடந்த மார்ச் மாதமே ஒடிசா சட்டப்பேரவையில் அறிவித்தார். இதனால் இங்கு தங்க சுரங்கம் தோண்டுவதற்கான ஏலம் விரைவில் நடைபெறும் எனத் தெரிகிறது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்சினாட்டி ரென்னிஸ் தொடரில் எரின்- கேப்ரியலா ஜோடி சம்பியன்

சின்சினாட்டி, ஒக. 19

சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ் தொடர் மகளிர் இரட்டையர் பிரிவில் எரின் - கேப்ரியலா ஜோடி சம்பியனானது.

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது.

இந்தத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவின் இறுதிப்போட்டியில் நியூசிலாந்தின் எரின் ரூட்லிப் - கனடாவின் கேப்ரியலா டப்ரோவ்ஸ்கி ஜோடி, சீனாவின் குவோ ஹன்யு - ரஷ்யாவின் அலெக்ஸாண்ட்ரா பனோவா ஜோடியுடன் மோதியது.

இதில், தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தி அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய எரின் ரூட்லிப் ஜோடி 6-4, 6-3 என்ற நேர் செற் கணக்கில் குவோ ஹன்யு - அலெக்ஸாண்ட்ரா பனோவா ஜோடியை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றது. (எ)



# சின்சினாட்டி ரென்னிஸ்: இறுதியில் ஸ்வியாடெக்


## ரைபகினா அதிர்ச்சி தோல்வி

சின்சினாட்டி, ஒக. 19

சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டிக்கு முதல் வீராங்கனையாக ஸ்வியாடெக் தகுதி பெற்றுள்ளார்.

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ள இந்தத் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவின் அரையிறுதி சுற்றின் முதல் ஆட்டத்தில் போலந்தின் இகா ஸ்வியாடெக், கஜகஸ்தானின் எலினா ரைபகினா ஆகியோர் மோதினர்.

முன்னணி வீராங்கனைகள் இருவர் மோதியதால் இந்த ஆட்டத்தில் அனல் பறந்தது. இருப்பினும் ஸ்வியாடெக் 7-5 மற்றும் 6-3 என்ற நேர் செற் கணக்கில் ரைபகினாவை வீழ்த்தி முதல் வீராங்கனையாக இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். (எ)



# ஆசிய கிண்ண கிரிக்கெட்: விளையாட பும்ரா ஆர்வம்

மும்பை, ஒக. 19

ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியில் விளையாடத் தயார் நிலையில் இருப்பதாக தெரிவுக் குழுவினரிடம் இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரீத் பும்ரா தெரிவித்துள்ளார்.

ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி செப்ரெம்பர் 9ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணி வரும் 19ஆம் திகதி தெரிவு செய்யப்படவுள்ளது.

அண்மையில் நடைபெற்று முடிந்த 5 போட்டிகள் கொண்ட இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரின் 3 போட்டிகளில் மட்டுமே பும்ரா விளையாடியிருந்தார். பணிச்சுமை காரணமாக அவருக்கு 2 போட்டிகளில் ஓய்வு வழங்கப்பட்டது.

இந்த நிலையில் ஆசிய கிண்ண போட்டியில் விளையாடுவதற்கு தான் தயாராக இருப்பதாக தெரிவுக் குழுவினரிடம் ஜஸ்பிரீத் பும்ரா தகவல் தெரிவித்துள்ளார். இந்தத் தகவலை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை வட்டாரங்கள் தெரிவித்தன. இது தொடர்பில் கடந்த சில தினங்களுக்கு முன்பு பி.சி.சி.ஐ. நிர்வாகிகளிடம் பேசியுள்ளதாகத் தெரியவந்துள்ளது. வரும் 19ஆம் திகதி இந்திய அணியை, தெரிவுக் குழுத் தலைவர் அஜித் அகார்கர் தலைமையிலான குழு தெரிவு செய்யவுள்ளது. இந்தக் கூட்டத்தில் 15 பேர் கொண்ட இந்திய அணி வீரர்கள் தெரிவு செய்யப்படுவர். (எ)

# ஆசிய கிண்ண தொடர்: பாக். அணி அறிவிப்பு

## பாபர் அஸாம், ரிஸ்வான் இல்லை

இஸ்லாமாபாத், ஒக. 19

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடருக்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணியில் அனுபவம் மிகுந்த வீரர்களான பாபர் அஸாம், முகமது ரிஸ்வான் ஆகியோர் இடம்பெறவில்லை.

ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி செப்ரெம்பர் 9ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறவுள்ளது. ரி - 20 வடிவில் நடைபெறும் இந்தத் தொடரில் நடப்பு சம்பியன் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், யு.ஏ.இ., ஓமன் உள்ளிட்ட 8 அணிகள் பங்கேற்கின்றன.

தலா 4 அணிகள் என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு லீக் சுற்று போட்டிகள் நடைபெறும். இதில் இரு பிரிவிலும் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் சுப்பர் 4 சுற்றுக்கு முன்னேறும். இந்தச் சுற்றில் முதல் 2 இடம் பிடிக்கும் அணிகள் செப்ரெம்பர் 28ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிச் சுற்றில் கிண்ணத்தை வெல்ல பலப்பரீட்சை நடத்தும்.

ஏ பிரிவில் இடம்பெற்றுள்ள இந்திய அணி வரும் செப்ரெம்பர் 10ஆம் திகதி யு.ஏ.இ, 14ஆம் திகதி பாகிஸ்தான், 19ஆம் திகதி ஓமன் அணிகளுடன் மோதவுள்ளது. இந்தியா பங்கேற்கும் போட்டிகள் அனைத்தும் டுபாயில் நடைபெறவுள்ளன.

இந்த நிலையில் இப்போட்டியில் பங்கேற்கும் பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணியில் அனுபவம் மிகுந்த வீரர்களான பாபர் அஸாம், முகமது ரிஸ்வான் ஆகியோர் இடம்பெறவில்லை.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் இந்த முடிவு அந்த நாட்டு கிரிக்கெட் ரசிகர்கள், ஆர்வலர்கள் ஆகியோரை அதிர்ச்சி கொள்ள செய்துள்ளது. ஏனெனில், சர்வதேச ரி - 20 கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள் எடுத்த பாகிஸ்தான் வீரர்களில் பாபர் அஸாமும் முகமது ரிஸ்வானும் முதல் 10 இடங்களுக்குள் இடம்பெற்றுள்ளனர். அதேபோல் ஐ.சி.சி. ரி - 20 துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் பாபர் அஸாம் 18ஆவது இடத்தையும் ரிஸ்வான் 20ஆவது இடத்தையும் பெற்றுள்ளனர்.



பாகிஸ்தான் அணிக்காக கடந்த ஆண்டு இறுதியில் இருவரும் சர்வதேச ரி - 20 கிரிக்கெட் போட்டியில் விளையாடியிருந்தனர். இந்த நிலையில் ரி - 20 வடிவில் நடைபெறவுள்ள ஆசிய கிண்ணத் தொடரில் இருவருக்கும் அந்த அணி நிர்வாகம் வாய்ப்பு வழங்கவில்லை.

ஆசிய கிண்ணத் தொடருக்கான பாகிஸ்தான் அணி விவரம் வருமாறு, சல்மான் அலி அகா (தலைவர்), அப்ரார் அகமது, பஹீம் அஷ்ரப், பஹர் ஸமான், ஹாரிஸ் ரவூப், ஹசன் அலி, ஹசன் நவாஸ், ஹூசைன் தலாத், குஷ்தில் ஷா, முகமது ஹாரிஸ் (விக்கெட் காப்பாளர்), முகமது நவாஸ், முகமது வசீம் ஜூனியர், சாஹிப்ஸான், சஹீப் ஸாதா பர்ஹான், சல்மான் மிர்ஸா, ஷாஹீன் ஷா அப்ரிடி, சுப்யான் மொகிம் ஆகியோர் அணியில் இடம் பெற்றுள்ளனர். (எ)

# பிரேவிஸ் ஒப்பந்த சர்ச்சை: அஸ்வின் புதிய விளக்கம்

சென்னை, ஒக. 10

சென்னை சுப்பர் கிங்ஸ் (சி.எஸ்.கே.) அணி நிர்வாகம், தென்னாபிரிக்க வீரர் டெவால்ட் பிரேவிஸை ஒப்பந்தம் செய்தது தொடர்பில் எழுந்த சர்ச்சைக்கு இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின் புது விளக்கம் அளித்துள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் இந்தியாவில் நடைபெற்ற ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டித் தொடரின் போது காயமடைந்த வேகப்பந்து வீச்சாளர் குர்ஜப்னீத் சிங்குக்கு பதிலாக தென்னாபிரிக்க அணியின் இளம் வீரரான டெவால்ட் பிரேவிஸை சி.எஸ்.கே. அணி ஒப்பந்தம் செய்திருந்தது. குர்ஜப்னீத் சிங் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த தொகைக்கே டெவால்ட் பிரேவிஸ் ஒப்பந்தம் செய்யப்பட்டார்.

இந்த நிலையில் டெவால்ட் பிரேவிஸூக்கு அதிக தொகை கொடுக்க சி.எஸ்.கே. அணி நிர்வாகம் தயாராக இருந்ததாக, இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும் நடப்பு சீசனில் சி.எஸ்.கே. அணிக்காக விளையாடியவருமான ரவிச்சந்திரன் அஸ்வின் தனது சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

இது பெரும் சர்ச்சையை எழுப்பியது. இதையடுத்து சி.எஸ்.கே. அணி நிர்வாகம் அளித்த விளக்கத்தில், "ஐ.பி.எல்.- 2025 சீசனின் நடுவில் டெவால்ட் பிரேவிஸை ஒப்பந்தம் செய்தது அனைத்தும் முறைப்படியே நடைபெற்றது. இதில் எந்த விதியையும் சி.எஸ்.கே. நிர்வாகம் மீறவில்லை" என்று தெரிவித்திருந்தது.

இதைத் தொடர்ந்து ரவிச்சந்திரன் அஸ்வின் கூறியதாவது: டெவால்ட் பிரேவிஸை சி.எஸ்.கே. அணி ஒப்பந்தம் செய்தது குறித்து அணி நிர்வாகம் விளக்கம் அளித்துள்ளது. எக்ஸ் சமூக வலைத்தளத்தில் அந்த பதிவை நான் பார்த்தேன். டெவால்ட் பிரேவிஸ் குறித்து நான் பேசிய வீடியோவில் அவரது ஆட்டம் குறித்து மட்டுமே நான் பேசியிருந்தேன். சரியான நேரத்தில் அவரை சி.எஸ்.கே. அணி ஒப்பந்தம் செய்துள்ளது என்றுதான் நான் கூறியிருந்தேன்.

அந்த வீடியோவை முழுவதுமாக பார்த்தவர்கள் இப்படி கூறுவதற்கு வாய்ப்பில்லை. அந்த வீடியோவின் சில நிமிடங்களை மட்டுமே பார்த்தவர்கள்தான் இவ்வாறு தகவலை திரித்து கூறுகின்றனர்.

இந்த விவகாரத்தின் தலைப்பு எப்படி வந்திருக்க வேண்டுமென்றால் 'சரியான நேரத்தில் பிரேவிஸை ஒப்பந்தம் செய்த சி.எஸ்.கே. அணி!' என்றுதான் வந்திருக்க வேண்டும். ஆனால், மாற்றி அர்த்தம் செய்து கொண்டவர்கள் குறித்து எனக்கு எந்தக் கருத்தும் இல்லை.



டெவால்ட் பிரேவிஸை எந்த தொகைக்கு ஒப்பந்தம் செய்தார்கள் என நான் பேசவில்லை. ஏனென்றால் அந்தத் தகவல் குறித்து எனக்கு தெரியாது. ஆனால், எனக்கு தெரிந்தது எல்லாம் அவரை ஒப்பந்தம் செய்ய வேறு சில அணிகளும் ஆர்வத்துடன் இருந்ததுதான்.

இன்றைய காலத்தில் சரியான விடயத்துக்கு கூட நாம் விளக்கம் தர வேண்டியுள்ளது- என்று அஸ்வின் விளக்கமளித்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹர்த்தால்...

விடுத்தது. அதனை ஏற்று வடக்கு-கிழக்கில் பெரும்பாலான இடங்களில் ஹர்த்தாலுக்கு ஆதரவு கிடைத்திருந்தது.

யாழ்ப்பாணத்தில் குறிப்பாக யாழ், நகர் பகுதியில் மாத்திரமே வர்த்தக நிலையங்கள் திறந்திருந்தது. அவர்கள் ஆதரவு வழங்காதது மன வருத்தமே.

வடக்கு - கிழக்கு முழுவதும் மக்களை ஒன்றிணைந்து போராட்டம் நடத்தக் கூடிய கட்சியாக தமிழரசுக் கட்சியே உள்ளது. அந்த வகையில் நாம் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்தோம். அது வெற்றியை தந்துள்ளது.

எமது ஹர்த்தால் அறிவிப்பு வந்தவுடனையே ஜனாதிபதி , அமைச்சர் பிமல் உள்ளிட்டவர்கள் எம்மைத் தொடர்பு கொண்டு பேசி இருந்தனர். முத்துஐயன் கட்டு இராணுவ முகாமை அங்கிருந்து அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம் எனக் கூறினார்கள். இதுவே வெற்றி.

வடக்கு-கிழக்கு பகுதிகளில் இருந்து இராணுவத்தினர் முற்றாக வெளியேற்றப்பட வேண்டும். அவர்கள் மக்களுடன் மக்களாக இருக்க முடியாது.

தெற்கில் இராணுவ முகாம்கள் உள்ளன. அங்கு அவர்கள் இராணுவ முகாம்களுக்குள் முடங்கிக் காணப்படுவார்கள். ஆனால் வடக்கு-கிழக்கில் அந்த நிலைமை இல்லை. அவர்கள் மக்களோடு மக்களாக, மக்களின் இயல்வு வாழ்வில் தலையீடு செய்கின்றனர்.

பாடசாலைகள் , தனியார் காணிகள் , ஏன் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றுக்கு சொந்தமான காணியைக்கூட கையகப்படுத்தி அதில் நிலைகொண்டுள்ளனர். அதனால் அவர்கள் இங்கிருந்து வெளியேற வேண்டும்.

இந்த ஹர்த்தால் ஒரு அடையாள போராட்டமே. இனிவரும் காலங்களில் இராணுவ முகாம்களை அகற்றக் கோரி போராட்டங்களை தொடர்ந்து முன்னெடுப்போம். வடக்கு-கிழக்கில் உள்ள பெரும்பாலான உள்ளூராட்சிச் சபைகள் தமிழரசுக் கட்சியின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. அதனால், அந்த அந்த பிரதேசங்களில் மக்களை ஒன்றிணைந்து , அந்த பிரதேசங்களில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றக் கோரி போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுக்கவுள்ளோம்.

பருத்தித்துறை நீதிமன்றுக்குச் சொந்தமான காணியில் இருந்து இராணுவத்தினரை வெளியேற்ற கோரி, பருத்தித்துறை நகர சபை நகர பிதாவின் அழைப்பில் போராட்டம் நடைபெறவுள்ளது. அவர் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் என்றாலும் அந்த போராட்டத்திற்கு தமிழரசுக் கட்சி பூரண ஆதரவை வழங்கும்.

வடக்கு கிழக்கில் இராணுவ மயமாக்கலுக்கு எதிராக தொடர்ச்சியான போராட்டங்கள் முன்னெடுக்கப்படும்- என்றார்.

குறித்த ஊடக சந்திப்பில் சி.வி.கே. சிவஞானம் கருத்து தெரிவிக்கையில்,

முத்துஐயன்கட்டு இளைஞன் கொலையானது, இளைஞன் தொடர்பாகவும் சில விமர்சனங்கள் உள்ளன. அவை எமக்கும் தெரியும். ஆனால் இதனை இராணுவ மயமாக்கலுக்கு எதிரான சுட்டியாக கொண்டே நாம் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்தோம்.

இங்கு நோக்கம் இராணுவ மயமாக்கலை எதிர்ப்பது. எனவே நோக்கம் சரியாக இருப்பின் ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்க வேண்டும். அதற்கு யார் அழைப்பு விடுத்தார்கள். யார் செய்கிறார்கள் என ஆராயாமல் ஆதரவு வழங்க வேண்டும்.

இங்கே ஒற்றுமை ஒற்றுமை என கூறித் திரிபவர்கள் இந்த விடயங்களில் கவனம் செலுத்தவேண்டும். நாம் நோக்கம் சரியாக இருந்தால் அதற்காக ஆதரவு கொடுப்பவர்கள். அவ்வாறு ஆதரவு கொடுத்து சென்றாலும் எங்களை துரத்துவதில் குறியாகவே உள்ளனர். அது தெரிந்தும் நோக்கம் சரியாக உள்ள போராட்டங்களுக்கு ஆதரவு கொடுத்துள்ளோம். போராட்டங்களிலும் கலந்து கொண்டுள்ளோம்- என்றார். (அ)

## 36 கட்சிகளின்...

நேர்முகத் தேர்வுகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் சமன் சிறிரத்நாயக்க தெரிவித்தார்.

அதேநேரம், இதுவரை 86 அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## நாட்டின்...

போக்குவரத்துச் சபையின் அதி சொகுசு ரக பஸ் சாலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிதி தொடர்பிலான எந்த பிரச்னையும் அரசாங்கத்துக்கு இல்லை. தேவையான அளவு பணம் இருக்கிறது. நாட்டின் பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மை ஏற்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்த சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை வரலாற்றில் அதிகமாக இருந்தது.

ஆனால், இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் மட்டும் 1.4 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் நாட்டு வருகை தந்துள்ளனர். அதிலிருந்து 1.7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானமாக கிடைத்துள்ளது.

வெளிநாடுகளில் வாழும் மக்கள் அனுப்பும் வெளிநாட்டு பரிமாற்றங்களாக 3.7 பில்லியன் டொலர்கள் கிடைத்துள்ளன. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிட்டால் 18.9 சதவீத அதிகரிப்பாகும் - என்றார்.

## கடற்றொழிலுக்கு...

சகலனுடன் கடல் தொழிலுக்காக சென்றிருந்தார். இந்நிலையில் அவருக்கு நேற்று அதிகாலை ஒரு மணியளவில் நெஞ்சு வலி ஏற்பட்டது. இதனால் படகிலேயே மயக்கமடைந்தார்.

மயக்கமடைந்த அவருடன் சகலன் அதிகாலை 2 மணியளவில் கரை சேர்த்தார். பின்னர் வைத்தியசாலைக்கு அவரைக் கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரின் மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். சடலம் உடல் கூராய்வுக்காக யாழ். போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (அ-05)

## முத்தையன்கட்டு...

அவர்களின் நீண்ட கால கனவை நனவாக்க எதிர்ப்பார்க்கின்றனர். வடக்கில் உள்ள இராணுவ முகாம்கள் அங்கிருந்து முற்றாக அகற்றப்பட வேண்டும் என்பதே அவர்களின் எதிர்ப்பார்ப்பு. தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தாக்குதல்கள் மூலம் வடக்கில் இருந்து இராணுவத்தினரை வெளியேற்றுவதற்கு முயற்சித்திருந்தார்.

30 வருடமாக உள்நாட்டு யுத்தம் இடம்பெற்றபோதிலும் புலிகளின் தாக்குதலில் அங்கிருந்து 10 இராணுவ முகாம்களையேனும் அகற்றமுடிய வில்லை. எனவே தற்போதும் அவ்வாறான நிலையே மீண்டும் உருவாகியுள்ளது. வேலுப்பிள்ளை பிரபாகரன் மேற்கொண்ட நடவடிக்கையின் தொடர்ச்சியாகவே இது அமைந்துள்ளது.

வடக்கில் மக்கள் குடியிருப்பு பகுதிகளில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டிருப்பது பிரச்னையாகும். எனவே அங்கிருந்து இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டும் என சுமந்திரன் கூறுகிறார். முல்லைத்தீவு முத்தையன்கட்டு இராணுவ முகாமுக்குள் இடம்பெற்ற சம்பவமானது திட்டமிட்டசெயலாகவே தெரிகிறது. பிரச்னையொன்றை தோற்றுவிப்பதற்காகவே பிரிவினைவாத தரப்பினர் இளைஞர்களை பலிக்கடாவாக்கியுள்ளனர். ஏனெனில் சுயநினைவில் இருக்கும் எவரும் இராணுவ முகாமுக்குள் களவாட செல்லமாட்டார்கள் என்றார்.

# "இலங்கையின் கனியவளங்களை இந்தியாவுக்கு விற்பதற்கு திட்டம்"

கொழும்பு, ஒக. 19

நாட்டில் கடந்த காலங்களில் இந்திய முதலீடுகளுக்கு எதிராக குரல் எழுப்பிய வர்கள் இன்று இலங்கையின் கனியவளங்களை இந்தியாவுக்கு விற்பனை செய்வதற்கு திட்டமிட்டுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும், நாட்டில் இந்திய முதலீடுகளுக்கு எதிராக குரல் எழுப்பியவர்கள் இன்று இந்தியாவுக்கு சென்று இலங்கையின் கனியவளங்களை விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சுனில் ஹந்துனெத்தி இந்தியாவுக்கு சென்று அங்கு இந்திய அதிகாரிகளுடன் நாட்டின் கனியவளங்களைவிற்பனை செய்வது தொடர்பாக கலந்துரையாடியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது .

ஒரு புறம் மின்சக்தி அமைச்சு மறுசீரமைப்பு என்ற பெயரில் பகுதி பகுதியாக பிரித்து 6 நிறுவனங்களுக்கு அவை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.இந்த நாட்டில் எதிர்காலத்தில் மின்சக்தி துறை மற்றும் வலுசக்தி துறை ஆகியன கேள்விக்குறியாகும்.

இலங்கையின் கனிம வளங்களை மொத்தமாக தம்வசப்படுத்திக் கொள்வதற்கு இந்தியா முயற்சிக்கின்றது. எதிர்காலத்தில் நீர்மின்சாரம் மற்றும் அணுசக்தி திட்டங்களுக்கு பயன்படுத்துவதற்காகவே இந்தியா இந்த திட்டத்துடன் செயற்படுகிறது.இந்த பின்னணியில் தற்போது அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி இந்தியாவுக்கு சென்று அங்கு பரிமாற்ற ஒப்பந்தம் ஒன்றிலும் கைச்சாத்திட்டுள்ளார்.இந்திய ஊடகங்களில் அது தொடர்பான புகைப்படமொன்று வெளியாகியிருந்தது-என்றார். (அ)

## தாளையடி...

இளைஞர் ஒருவரின் பிறந்தநாள் கொண்டாட்டத்துக்காக ஒன்பது நண்பர்கள் இணைந்து உழவு இயந்திரத்தில் பளை கரந்தாய் பகுதியில் இருந்து நேற்று மதியம் தாளையடி கடற்கரைக்கு சென்றுள்ளனர்.

பிறந்தநாளை கொண்டாடிக் கொண்டிருந்த நண்பர்கள் கடல் விளையாட்டுகளிலும் ஈடுபட்டிருந்தனர். இதன்போது தலையில் காயமுற்ற இளைஞரை உடனடியாக நண்பர்கள் மீட்டு உழவு இயந்திரத்தில் மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் அனுமதித்த போதும் அவரை பரிசோதித்த வைத்தியர் இளைஞன் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று தெரிவித்தார்.

உயிரிழந்த இளைஞரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. மருதங்கேணி பொலிஸார் சக நண்பர்களிடம் வாக்குமூலம் பெற்றுள்ளதோடு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-05)

## வர்த்தக...

முக்கியஸ்தருமான செ. மயூரன் அவ்விடத்துக்கு வருகை தந்து தானும் கருத்து கூறினார். இதன்போது தலைவருக்கும், போசகருக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த வர்த்தக சங்கத் தலைவர்-

போசகர் தேர்தலில் படுதோல்வி அடைந்தவர். அவர் தற்போது கூறுவது எந்த நியாயமும் இல்லை. சுமந்திரனை பின்கதவால் வர்த்தக சங்கத்துக்கு கூட்டி வந்தது இவர்தான். அது தான் உண்மை. இவர் தான் சங்கத்தின் போசகர். சுயமாக இந்த வர்த்தக சங்கம் செயற்படும். அவர் மனநிலை பாதிக்கப்பட்டவர் போல் மாறி கூறுவது வேடிக்கை. எமது வர்த்தக சங்க போசகர் என்ற மனநிலையில் இருந்து பேசச் சொல்லுங்கள் -என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த போசகர் செ.மயூரன்,

நாங்கள் ஹர்த்தாலுக்கு அறிக்கை விட்டுள்ளோம். சுமந்திரனை நான் தான் வர்த்தக சங்கத்துக்கு கூட்டி வந்தேன். ஊடக அறிக்கை விடுமாறு எந்த தீர்மானமும் எடுக்கவில்லை. ஒரு கட்சியின் பின்னணியில் இயங்குபவரே தலைவர். தன்னிசையாக தீர்மானம் எடுக்க முடியாது. வர்த்தக சங்கம் என்பது நகரத்துக்குள் உள்ள ஒரு சங்கமே தவிர வவுனியாவுக்கானது அல்ல. நெடுங்கேணி, செட்டிகுளம், பூந்தோட்டம், நெளுக்குளம் என வர்த்தக சங்கங்கள் இருக்கும்போது இது வவுனியா வர்த்தக சங்கம் என எப்படி கூற முடியும் - என்றார். (அ)

## பணம் ஈட்டிய...

இலஞ்ச சட்டத்தால் திருத்தப்பட்ட 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பணச்சலவை தடுப்புச் சட்டத்தின் விதிகளின்படி இந்த முன்னாள் அமைச்சர்கள் சொத்துக்களை ஈட்டியவை தொடர்பாக விசாரணை தொடங்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதன்படி, குறித்த முன்னாள் அமைச்சர்கள் எதிர்காலத்தில் இந்த பிரிவுக்கு அழைக்கப்பட்டு, அவர்களிடம் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த விசாரணையுடன் தொடர்புடைய முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு மற்றொரு சம்பவம் தொடர்பாக சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தமிழரசு ...

சம்பவத்திற்கும் இராணுவத்தினருக்கும் தொடர்பு இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில், வடக்கு-கிழக்கில் அதிகரித்துள்ள இராணுவ பிரசன்னத்தாலேயே இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதாகவும், அதனால் இராணுவத்தினரை வெளியேற்றுமாறு கோரி தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம். ஏ.சுமந்திரன் வடக்கு கிழக்கில் பூரண கதவடைப்புப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தார்.

முன்னதாக 15ஆம் திகதி கதவடைப்பு போராட்டம் என அறிவிக்கப்பட்ட நிலையில் அன்றைய தினம் மன்னார் மடு தேவாலய பெருநாள் என்பதால், 18ஆம் திகதியான நேற்றைய தினத்திற்கு மாற்றப்பட்டது.

கதவடைப்புப் போராட்டத்திற்கு தம்முடன் கலந்து ஆலோசிக்கவில்லை என வர்த்தக சங்கங்கள், யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம், பொது அமைப்புகள் குற்றம்சாட்டி, போராட்டத்திற்கு ஆதரவு வழங்க மறுத்திருந்தன.

இந்நிலையில் நேற்றுக் காலை சில இடங்களில் கடைகள் பூட்டப்பட்டு இருந்தாலும், பல இடங்களில் கடைகள் திறக்கப்பட்டு இருந்தமை அவதானிக்க முடிந்தது.

அதேவேளை போக்குவரத்து சேவைகள் வழமை போன்று இயங்கியதுடன், அரச திணைக்களங்கள், பாடசாலைகள் என்பனவும் வழமை போன்று இயங்கின.

கிளிநொச்சி மாவட்டத்தில் கதவடைப்புக்கு ஆதரவு வழங்கப்படவில்லை என்பதுடன் நகரத்தின் அனைத்து வர்த்தக நிலையங்களும் திறக்கப்பட்டன.

வடக்கு-கிழக்கு தழுவிய ரீதியில் நேற்று ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் வவுனியாவில் பொது மக்களின் செயல்பாடுகள் இயல்புநிலையில் இருந்ததுடன் சில செயற்பாடுகள் மட்டுமே ஸ்தம்பிதமடைந்திருந்தன.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களிலும் இயல்பு நிலை காணப்பட்டது. கிழக்கு மாகாணத்திலும் இவ்வாறான நிலைமையே காணப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## ரயில் மறியல் போராட்டத்துக்கு தயாராகும் தமிழக மீனவர்கள்!

சென்னை, ஓக. 19

இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ள தமிழக கடற்றொழிலாளர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி இராமேஸ்வரத்தில் ஆரம்பிக்கப்பட்ட காலவரையறையற்ற வேலைநிறுத்தப் போராட்டம், நேற்று 8ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

கடந்த இரண்டு மாதங்களில் மாத்திரம், இந்திய கடற்றொழிலாளர்கள் 64 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 24 கடற்றொழிலாளர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஏனைய கடற்றொழிலாளர்கள் நிபந்தனைகளின் அடிப்படையில், நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் தமது கடற்றொழிலாளர்களை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்டுள்ள போராட்டத்தின் ஒரு கட்டமாக, இன்று இராமேஸ்வரத்தில் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகத் தமிழக விசைப்படகு உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஜேசு குறிப்பிட்டுள்ளார். (அ)

# சீனா செல்கிறார் பிரதமர் ஹரிணி!

### அந்நாட்டு ஜனாதிபதியுடன் பேசுவார்

கொழும்பு, ஓக. 19

**பிரதமர் ஹரிணி அமரசூரிய, ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சிமாநாட்டில் பங்கேற்க எதிர்வரும் 29ஆம் திகதி சீனாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.**



தியான்ஜினில் 31ஆம் திகதி நடைபெறும் மாநாட்டில் அவர், சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் உள்ளிட்ட தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகள் நடத்த உள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட உறுப்பு நாடுகளின் தலை வர்களையும் அவர் சந்திக்க உள்ளார்.

இந்நிலையில், உலக அரசியலில் அமெரிக்கா-இந்தியா உறவில் ஏற்பட்ட விரிசல்கள் மற்றும் சீனா-ரஷ்யா கூட்டணி வலுப்படுதல், மாநாட்டுக்கு கூடுதல் முக்கியத்துவத்தை அளிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் இலங்கை ஒரு "உரையாடல் பங்குதாரர்" என்ற நிலையில் உள்ளது.

இலங்கையின் பாரம்பரிய அணி சேராக் கொள்கை, தற்போதைய உலக ஒழுங்கில் பெரும் சவால்களைச் சந்தித்து வருகிறது. (அ)

## நல்லூரில் பலத்த பாதுகாப்பு

யாழ்ப்பாணம், ஓக. 19

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதற்கமைய, ஆலய வளாகத்திலும், அதனை அண்மித்த பகுதிகளிலும் சி.சி.ரி.வி கமெராக்கள் ஊடாக கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

நல்லூர் வருடாந்த மகோற்சவத்தில் நேற்று முதல் எதிர்வரும் ஐந்து நாட்கள் விசேட உற்சவங்கள் இடம்பெறவுள்ளன.

அதற்கமைய, நாட்டின் பல பகுதிகளில் இருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் பெருந்திரளானவர்கள் உற்சவத்தில் கலந்துகொள்வார்கள்.

உற்சவத்தில் கலந்து கொள்ளும் அடியார்களின் பாதுகாப்பின் நிமித்தம் அதிக பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் அனைத்து பொலிஸ் நிலையங்களில் இருந்தும் சிவில் அதிகாரிகள் வரவழைக்கப்பட்டு, கண்காணிப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ)

## மாகாண தேர்தலுக்குப் பின் அரசியலமைப்புத் திருத்தம்!

### அமைச்சர் பிமல் கூறுகிறார்



கிளிநொச்சி, ஓக. 19

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்ட பின்னர் அரசியலமைப்புத் திருத்தம் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள சட்டச் சிக்கல்கள் தீர்க்கப்பட்ட பின்னர், அடுத்த ஆண்டு முதல் 6 மாதங்களுக்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

கிளிநொச்சி பகுதியில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் பிமல் ரத்நாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

"நாங்கள் 2025 இல் தேர்தலை நடத்தினோம். 2024 நவம்பரிலும் தேர்தலையும் நடத்தினோம். அடுத்த ஆண்டு முதல் 6 மாதங்களில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவோம் என்று நம்புகிறோம்.

சட்டத் தடைகள் உள்ளன. அவற்றை அகற்ற முயற்சிக்கிறோம். அரசியலமைப்பைக் கொண்டுவருவது குறித்து எங்களிடம் கொள்கை முடிவு உள்ளது. அரசியலமைப்பைக் கொண்டுவருவது ஒரு விரிவான செயல்முறை.

அதற்கு முன்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதே எங்கள் இலக்கு. மாகாண சபைத் தேர்தலை நடத்திய பிறகு அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் குறித்த விரிவான அரசியல் திட்டத்தைத் தொடங்குவோம்." என்றார். (அ)

# மூலோபாய திட்டங்களைத் தயாரிக்க தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை

கொழும்பு, ஓக. 19

2026 முதல் 2029 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்துக்கான மூலோபாயத் திட்டங்களைத் தயாரிப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தற்சமயம் தொடர்புடைய தரப்புகளிடமிருந்து இதற்காக முன்மொழிவுகள் பெறப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

அதற்கமைய, அரசியல் கட்சிகள், கண்காணிப்பு அமைப்புகள், ஊடக நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து முன்மொழிவுகள் எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தல்கள் தொடர்பான சட்ட சீர்திருத்த நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

அதற்காக, தேர்தல்கள் ஆணைக்குழுவை தவிர, அரசாங்க அச்சகம், அஞ்சல் திணைக்களம், பொலிஸ்துறை, தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள், அரச மற்றும் அரச சாரா நிறுவனங்கள் உள்ளிட்ட தரப்புகளிடமிருந்தும் கருத்துக்களைப் பெறத் தொடங்கியுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (அ)

## சோமரத்ன ராஜபக்ஷவின் கடிதங்கள் செய்தித் தலைப்புகளுக்கு மாத்திரமே! கூறுகின்றது அரசாங்கம்

கொழும்பு, ஓக. 19

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் பிரதான குற்றவாளியாக நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்பட்ட சோமரத்ன ராஜபக்ஷவின் கடிதங்கள் ஊடகங்களுக்கான செய்தி தலைப்புகள் மாத்திரமே என அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அண்மையில் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த கடிதம் குறித்து நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவிடம் வினவியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னதாக, சோமரத்ன ராஜபக்ஷவின் பெயரில், அவர் மனைவி அனுப்பிய கடிதங்கள் எதுவும் தனக்கு இதுவரை கிடைக்கவில்லை எனவும் நீதி அமைச்சர் தெரிவித்தார்.

முன்னர் ஒரு கடிதம் அனுப்பப்பட்டதாகக் கூறினாலும் அது ஜனாதிபதிக்கு மாத்திரமே அனுப்பப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

எனினும், அவர்கள் பத்திரிகைகளில் கட்டுரைகளாக வரும் என்ற நோக்கத்திலேயே இவ்வாறான கடிதங்களை அனுப்புவதாகவும் நீதி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஒருவேளை தனக்கு அந்தக் கடிதம் கிடைத்தால் அது குறித்த அடுத்த கட்ட நடவடிக்கையைத் தாம் எடுப்பதாகவும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

இதேவேளை, செம்மணிக்கு அப்பால் பல முக்கிய ஆதாரங்களுடன் சாட்சியமளிக்கத் தயாராக இருப்பதாக ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கும் வாக்குறுதியளிப்பதாக கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் பிரதான குற்றவாளியாக நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (அ)

## தபால் தொழிற்சங்கங்களின் போராட்டம் நியாயமற்றது!

கொழும்பு, ஓக. 19

தபால் தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடுவது நியாயமற்றது என தபால்மா அதிபர் ருவான் சத்குமார தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், தபால் தொழிற்சங்கள் முன்வைத்துள்ள 19 கோரிக்கைகளில் பல ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளவையாகும்.

அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எதிராகவே இந்த வேலை நிறுத்த போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

நாம் அனைவரும் அரச உத்தியோகத்தர்கள் என்பதால் அரசாங்கத்தின் கொள்கைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆட்சேர்ப்பு தொடர்பான கோரிக்கையும் இவர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டு 600 தபால் அதிகாரிகளை சேவையில் இணைத்துக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய போட்டிப் பரீட்சைகளை நடத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டு சம்பளம் மற்றும் மேலதிக வேலை நேர கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ள வீதத்தை அடிப்படையாகக் கொண்டு அவதானித்தால் தொழிற்சங்கங்களால் முன்னெடுக்கப்படும் வேலை நிறுத்த போராட்டம் நியாயமற்றதாகும்.

கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

அதற்கமைய குறிப்பிட்ட வழிமுறையொன்றுக்கு இணக்கம் காணப்பட்டு அவர்களால் கையெழுத்திடப்பட்ட கடிதமொன்றும் எம்மிடமுள்ளது.

அதற்கமைய கைரேகை பதிவிற்கு அவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளார். அவ்வாறிருக்கையில் தற்போதும் அதற்கும் எதிர்ப்பினை வெளியிட்டு வேலை நிறுத்தங்களில் ஈடுபடுவது நியாயமற்றது-என்றார். (அ)

## இந்தியாவில் இருந்து கப்பலில் இலங்கை வரும் பயணிகளுக்கு விசேட சலுகைகள்!

கொழும்பு, ஓக. 19

இந்தியாவில் இருந்து கப்பலில் இலங்கை வரும் பயணிகளுக்கு விசேட அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி இந்திய பாடசாலை மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு இலங்கையில் தங்குவதற்கு சிறப்புச் சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது.

கப்பல் பயணச்சீட்டு கட்டணம் மற்றும் பயணச் செலவு என அனைத்தையும் சிறப்புச் சலுகையாக 9,999 இந்திய ரூபாயாகக் கப்பல் நிறுவனம் அறிவித்துள்ளது.

மாணவர்களை ஒருங்கிணைத்து அழைத்து வரும் 2 ஆசிரியர்களுக்கு இலவச பயணச்சீட்டு வழங்கப்படும் என கப்பல் நிறுவன உரிமையாளர் சுந்தர்ராஜன் தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.08.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.